விலை: 50.00
பக்கங்கள் - 28

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 001 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 05 சனிக்கிழமை (20.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




அனைவரும் விரும்பிப் படிக்கும் ஆசிரியர் தலையங்கம்

## வடக்கின் ஊடக வரலாற்றில் வலம்புரி தலைநிமிர்ந்து நிற்கிறது

### வட மாகாண ஆளுநர் வேதநாயகன் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஊடக வரலாற்றில் வலம்புரி நாளிதழ் தலைநிமிர்ந்து நிற்கிறது.

அனைவராலும் விரும்பிப் படிக்கப்படும் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் திறனாய்வு முறையில் நடுநிலையுடன் சமூக நோக்கைத் தெளிவாக உணர்த்துகிறது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வலம்புரியின் 26ஆவது அகவை நிறைவையொட்டி வழங்கிய வாழ்த்துச் செய்தியில் புகழாரம்

27ஆம் பக்கம் பார்க்க




விரைவில் மாகாண சபைத் தேர்தல்

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கம்

### பாராளுமன்றில் பிரதமர் ஹரிணி உறுதி



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படுவதோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச நாணய நிதியம்

## 206 மில்லியன் டொலர் இலங்கைக்கு நிதியுதவி

(கொழும்பு)

சர்வதேச நாணய

02ஆம் பக்கம் பார்க்க

## டித்வா பேரிடரால் பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாது



### பாராளுமன்றில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

டித்வா பேரிடர் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் நாட்டில் பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற 500 பில்லியன் ரூபாய் குறைநிரப்பு

02ஆம் பக்கம் பார்க்க

யாழ்.உள்ளக விளையாட்டு அரங்கை

## அமைக்க விதிக்கப்பட்ட தடை நீடிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ள விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்கால கட்டளை நீடிக்கப்படவில்லை.

இந்த இடைக்காலக் கட்டளையைக் கடந்த தவணையில் இரண்டு வாரங்களுக்கு

27ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா ஈச்சங்குளத்தில் குடும்பப் பெண் கொலை

### கழுத்தில் வெட்டுக்காயத்துடன் கணவன் மீட்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இச்

27ஆம் பக்கம் பார்க்க

ரூ.500 பில்லியன்

## குறைநிரப்பு பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டி

27ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசியப் பேரவை எடப்பாடியுடன் சந்திப்பு



02ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக மூவர் பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் திறமை அடிப்படையில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் ஒருவர் திறந்த விளம்பரப்படுத்தல் அடிப்படையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் கூட்டம் நேற்று(19) வெள்ளிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி சுகன்யா அரவிந்தன், கலாநிதி சிவராஜா உமேஸ் மற்றும் திறந்த முறையில் கோரப்பட்ட விளம்பரத்துக்கு அமைவாக விண்ணப்பித்திருந்த சட்ட வைத்திய நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் இசைத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் இசையியல் பேராசிரியராகவும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவராஜா உமேஸ் சந்தைப்படுத்தலில் பேராசிரியராகவும் பதவியுயர்த்தப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்தியநிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் சட்ட வைத்தியப் பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (ம-7,33)

## தமிழ்த் ...

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமிக்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஏக்கிய இராச்சிய அரசியல் யாப்பு நிராகரிப்பு, தமிழர் தேசம் இறைமை, சுயநிர்ணய உரிமை, அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி யாப்பு உருவாக்கப்படல் வேண்டும். ஈழத் தமிழ் கடற்தொழிலாளர் பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் ஆகிய விடயங்கள் முக்கியமாகப் பேசப்பட்டன.

தமிழக முதலமைச்சருடன் பேசப்பட்ட விடயங்களும் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொ.ஐங்கரநேசன் (தலைவர் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்), செ.கஜேந்திரன் (செயலாளர் த.தே.ம.மு), த.சுரேஸ் (தேசிய அமைப்பாளர்), க.சுகாஷ் (சிரேஷ்ட சட்டத்தரணி), ந.காண்டீபன் (சிரேஷ்ட சட்டத்தரணி) ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## டித்வா ...

மதிப்பீட்டு விவாதத்தில்விசேட உரை ஆற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலரின் பெறுமதியை நிலையாகப் பேணுவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் உடனடி உதவியை எதிர்பார்க்கின்றோம்.

2026 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த டொலர் அளவை விட 500 மில்லியன் டொலர் மேலதிகமாக ஈட்டுவதன் மூலம் டொலரின் மீதான அழுத்தத்தைத் தவிர்க்க முடியும்.

முழுமையாக 6 ஆயிரம் 282 வீடுகளுக்கு சேதம். 4 ஆயிரம் 543 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம். எவ்வித சேதமும் ஏற்படாத போதிலும் NBRO வினால் அனுமதி வழங்காத 6 ஆயிரம் 877 வீடுகள் உட்பட மொத்தம் 17 ஆயிரம் 648 வீடுகளுக்கு மூன்று மாத காலத்திற்கு மாதமொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். (ம-7)

## நிறைவேற்று ...

பாராளுமன்றத்தில் நேற்று (19) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையானது, முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பின் ஊடாகவே ஒழிக்கப்படும்.

புதிய அரசியலமைப்பின்றி இதனைச் செய்ய முடியாது என்பதால், அதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய அரசியலமைப்பை வரைவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்றார்.

மேலும், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ம-7)

## 206 மில்லி ...

நிதியம் இலங்கைக்கு 206 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கைக்கு அவசர கால நிதியுதவியை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் மூலம் விரைவான சுமார் 206 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை உடனடியாகப் பெற்றுக்கொள்ளும் வசதி இலங்கைக்குக் கிடைத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. (ம-7)


## விற்பனைக்கு (அவசர தேவை)

- ஒரு சோடி இந்தியன் குத்துவிளக்கு 5 அடி உயரம் ~~200,000~~ 170,000/=
- Computer Desktop( Acer Nilro, Intel 7 - 8700) ~~130,000~~ 90000/=
- 6 அடி ஓ 4 அடி நாய்க்கூடு - ~~45,000~~ 30,000
- Butterfly wet கிரைண்டர் ( 3 கல் உள்ளது) ~~20,000~~ 15000/=
- சிசில் டபுள் டோர் (double Door) Fridge,மிக நல்ல நிலையில் உள்ளது. ~~45,000~~ 30000/=
- திருத்த வேண்டிய p-3, P-4, Desktop, Computers, U.P.S (பற்றி போடவேண்டியது)
- புதிய Dialog Receiver என்பன உண்டு.
- புதிய பழைய Laptop உம் உண்டு.

(6330)

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

071 803 4182 - உரும்பிராய்



J.D.C.A

JAFFNA DISTRICT CRICKET ASSOCIATION

(20/12/97) 28 NOT OUT (20/12/25)

GIN ANNA
Ex.Cp Member
J.D.C.A

(C-4631)





# மரண அறிவித்தல்

## பரமுப்பிள்ளை சோமாஸ்கந்தராசா




கரணவாய் வடக்கு கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமுப்பிள்ளை சோமாஸ்கந்தராசா அவர்கள் கடந்த (17.12.2025) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ்சென்ற இளையதம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சின்னத்தம்பி, குருசாமி, தவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், பரமசிவம், செல்வராசா, இராதாகிருஷ்ணன், பொன்னையா மற்றும் கனகரட்ணம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஈஸ்வரன் (ஜேர்மனி), ரகுராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நிர்மலாதேவி, கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுவாஸ்திகா, பிரமிளா, தாரகா, திருஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"ஈஸ்வரி வாசா"
இளையதம்பி பிளேஸ்,
கொற்றாவத்தை.

தகவல்:
பெறாமக்கள்
077 612 8127

(C-4632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலங்களில் அதிகரிக்கும் மோசடிகள்!

### அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்து

(கொழும்பு) ..............................

**பண்டிகைக் காலத்திலும், பேரிடர் காலத்திலும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மோசடிகள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு இலங்கை கணனி அவசரகால பதில ளிப்புக்குழு அறிவுறுத்தியுள்ளது.**

கடந்த சில வாரங்களாக சமூக ஊடக தளங்கள் வழியாக இணைய மோசடி மற்றும் பண மோசடி முயற்சிகள் அதிகரித்து வரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

மோசடியாளர்கள் சமூக ஊட கங்களை பயன்படுத்தி போலி விளம்பரங்கள், வெகுமதிகள் மற்றும் பரிசுகளை வழங்கு வதாக பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சில தனிநபர் களின் வங்கிக்கணக்குக ளுக்குள் இரகசியமாக உள் நுழைந்து, மோசடி செய்பவர்களால் கணக்குகள் கையகப்படுத் தியுள்ளமையும் தெரியவந் துள்ளது.

எனவே சந்தேகத்திற்கிட மான இணைப்புகளை தொடர வேண்டாம் என்றும், தனிப்பட்ட தகவல்களைப் பகிரும் போதும், தெரியாத நபர்கள் அல்லது சரிபார்க்கப்படாத வலைத்தளங் களை அணுகும்போதும் அவ தானமாக செயற்படுமாறு எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கடவுச்சொற்களை ஒருபோதும் வெளி நபர்களி டம் பகிர வேண்டாம் என் றும் இலங்கை கணனி அவசர கால பதிலளிப்பு குழு பொது மக்களுக்கு அறிவுறுத்தியு ள்ளது. (நி)

# சீமானை சந்தித்த தமிழ் தேசிய பேரவை



(சென்னை)

நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானுக்கும் தமிழ்த் தேசிய பேரவைக் கும் இடையிலான சந்திப்பு தமிழ்நாட்டில் நீலாங்கரை யில் உள்ள அவரது இல்ல த்தில் நேற்று நடைபெற்றது.

2 மணிநேரம் நடை பெற்ற கலந்துரையாடலின் போது தமிழர் தேசம் இறைமை சுயநிர்ணய உரிமை அங்கீ கரிக்கப்பட்ட சமஷ்டி யாப்பு உருவாக்கப்பட குரல் கொடுக்க ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியம் குறி த்து பேசப்பட்டது.

அத்துடன் ஐக்கிய இராச்சிய அரசியல் யாப்பினை நிராகரிப் பதற்கான அவசியம், ஈழத் தமிழ் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கான தீர்வு முத லான விடயங்கள் குறித்தும் முக்கியமாக கலந்துரையாடப் பட்டது.

அதேவேளை, முதலமைச் சருடன் பேசப்பட்ட விடயங்கள் எழுத்து மூலம் கையளிக் கப்பட்டது. (நி)



### பல்லாண்டு 'வலம்புரி'யும் உயர்ந்தோங்கட்டும்

-கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்-

உயர்வான பணிகள் பல ஓங்குவிக்க
உவப்போடு வந்துதித்து இனத்தைக் காக்கும்
நயம்மிக்க "வலம்புரி" யும் நம்கை சேர்ந்து
நானிலத்தில் இருபத்தாறு அகவைதன்னை
சயத்தோடு கடக்கின்ற செய்தி கேட்டு
சனமெல்லாம் மிகமகிழ்வு எய்திற்றம்மா!
வியப்பெய்தி உலகத்தார் போற்றும் வண்ணம்
வீறோடு "வலம்புரி" யும் வளர்க மாதோ!

நம்முடைய குரலென்றே நயந்து மக்கள்
நாள்தோறும் படிக்கின்ற தகுதி பெற்று
தெம்புடனே "வலம்புரி" யும் வளர்ந்ததம்மா!
தேற்றமுறப் புகழ் சேர்த்துத் திகழ்ந்ததம்மா!
அம்புவியில் அறத்தோடு அழகும் சேர்த்து
அன்றாடம் வருகின்ற அழகைப் பார்த்து
வெம்பி மனம் நொந்தேதான் வீழச் செய்ய
விழைந்தவர்கள் ஏமாந்து வெறுத்து நின்றார்.

ஆற்றல்மிகு ஆசிரியர், அதனைக் காக்க
அயராது உழைக்கின்ற நிறுவனத்தார்
தேற்றமுறப் பணிசெய்யும் நிருபரோடு
தினமும் தம் முயற்சியினை வழங்கி நிற்கும்
ஊற்றமிகு ஊழியர்கள் உலகம் சேர்க்க
ஒப்பற்று விற்பனையால் உயரச் செய்வோர்
மாற்றமுறா தொன்றிணைந்து அமைந்து போக
மனம் மகிழ "வலம்புரி" யும் உயர்ந்ததம்மா!

கம்பன்வன் பணிகளிலே எமக்கு நல்ல
கனிவோடு கைகொடுத்து உதவி நின்று
தெம்பு தரும் "வலம்புரி" யின் வளர்ச்சி கண்டு
தேற்றமுற மனம் மகிழ்ந்து நின்றோம் நாமும்
தம்முடைய பொருள் கொடுத்து எம்மைக் காக்கும்
தயவுமிகு நிறுவனத்தார் தம்மின் வாழ்வு
அம்புவியில் நாளாந்தம் உயரவேண்டி
ஆண்டவனைக் கைகூப்பிப் பணிந்தே நின்றோம்.

பல்லாண்டு "வலம்புரி" யும் உயர்ந்து ஓங்க
பரமனவன் திருவடியைப் போற்றி நின்றேன்
மல்லாண்டு அழிவுகளைக் கண்ட எங்கள்
மண்ணதுவும் மீண்டு வர துணைகள் செய்து
நல்லோர்கள் வாழ்த்திடவே மேலும் மேலும்
நயத்தோடு வளர்ச்சிதனைக் கொண்டே ஓங்கி
எல்லோரும் வாழ்ந்திடவே வழிகள் செய்து
நாளும் தான் "வலம்புரி" யும் வளர்க மாதோ!

### அதிகரிக்கும் சிக்குன்குனியா!

# இலங்கைக்கான பயண ஆலோசனையை திருத்தி வெளியிட்ட அமெரிக்கா



(வோஷிங்டன்)

இலங்கைக்கான இரண் டாம் நிலை சுகாதார பயண ஆலோசனையை அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

நுளம்புகளால் பரவும் சிக்குன்குனியா வைரஸ் அதிகரித்து வரு வதைக் கருத்திற் கொண்டு மேம்பட்ட முன்னெச்சரி க்கை பாதுகாப்பு நடவடிக் கையாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியின் பேர ழிவு தாக்கத்திலிருந்து மீள தெற்காசிய தீவு நாடு போராடி வரும் நிலையில் இந்த எச்சரிக்கை வந்து ள்ளது.

டித்வா சூறாவளி இலங் கையின் உட்கட்டமைப்பை முடக்கி, சுகாதார சேவைக ளைப் பாதித்துள்ளதாக அமெ ரிக்க நோய்க் கட்டுப் பாட்டு மற்றும் தடுப்புப் பிரிவு சுட்டிக் காட்டியுள் ளது. (நி)

# கைத்தொழில் முயற்சியாளர்களின் வங்கிக் கடன்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட சிறு, நடுத்தர கைத்தொழி லாளர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் வங் கிக் கடன்களுக்கு மேலதிக அறவீடு இன்றி 3 முதல் 6 மாத நிவாரண காலம் வழங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

வங்கிகளுடன் கலந்தாலோ சித்து இந்நிவாரணத்தைப் பெறலாம் என கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி பாராளுமன்ற த்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட் டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகை யில் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும் அவர் தெரிவிக் கையில்,

முழு நாடும் வெள்ளம், சூறாவளி, மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி யுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலை மையில் இன நல்லிணக்கம் உறுதியானது.

முப்படை, பொலிஸ், அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

சிறு, நடுத்தர கைத்தொழி ல்கள் 29,000 பாதிக்கப்பட்டன.

திறைசேரி 1 பில்லியன் ரூபா அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக 9628 தொழில்களுக்கு 150 மில் லியன் ரூபா பிரதேச செய லகங்களுக்கு வழங்கப்பட்டது.

வங்கிக் கடன்களுக்கு எவ்வித மேலதிக அறவீடு களும் இல்லாமல் 3 முதல் 6 மாதம் என்ற அடிப்படையில் நிவாரண காலம் வழங்க, மத்திய வங்கி தலையீட்டுடன் வங்கி பிரதானிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

கடன் பெற்ற தொழிலாளர் கள் வங்கிகளுடன் கலந்தா லோசித்து நிவாரணம் பெற லாம்.

பாதிக்கப்பட்டுள்ள தொழில் துறைகளை மீட்டெடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

ஆகவே எதிர்க்கட்சியினர் விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக் காமல் முடிந்தால் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## முல்லைத்தீவில் இடம்பெற்ற யூடோ பயிற்சி முகாம்



முல்லைத்தீவு மாவட்ட வீரர்களின் யூடோ விளையாட்டு திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு தினங்களும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக அரங்கில் யூடோ பயிற்சி முகாம் நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாம் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஒழுங்குபடுத்தலுடன், வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னாள் தேசிய யூடோ பயிற்றுவிப்பாளர் ஜயவர்தன மாவட்ட யூடோ வீரர்களுக்கான தொழில்நுட்ப அறிவு மற்றும் நடைமுறை திறன்களை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 50 யூடோ வீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த பயிற்சி முகாம் எதிர்காலத்தில் மாவட்ட யூடோ வீரர்கள் தேசிய மட்டத்தில் சிறந்த சாதனைகளைப் படைக்க வழிவகுக்கும் முக்கிய நிகழ்வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-299)

## ஃபிபா உலகக் கிண்ணம்; இரட்டிப்பானது பரிசுத் தொகை




2026 ஆம் ஆண்டு பி.பா (FIFA) உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு 50 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள சாதனை பரிசுத் தொகை வழங்கப்படும் என்று கால்பந்து உலக நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

அந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு 42 மில்லியன் டொலர் ஆகவும், 2018 ஆம் ஆண்டு 38 மில்லியன் டொலர் ஆகவும் இருந்தது.

அதேநேரம், அடுத்த ஆண்டு அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோவில் நடைபெறும் உலகக் கிண்ணத்துக்கான மொத்த பரிசு நிதி 655 மில்லியன் டொலர்கள் என்றும் பி.பா (FIFA) தெரிவித்துள்ளது.

இது கட்டாரில் நடைபெற்ற முந்தைய பி.பா உலகக் கிண்ண சீசனுக்கான பரிசுத் தொகையை விடவும் 50 சதவீதம் அதிகமாகும்.

2026 ஆம் ஆண்டுக்கான பிபா உலகக்கிண்ணம் ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

## விளையாட்டில் ஊக்கமருந்து பாவனை இந்தியா தொடர்ந்து முதலிடம்

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து பாவிப்பவர்களின் பட்டியலில் இந்தியா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது விளையாட்டுத் துறையில் இந்தியாவுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச ஊக்கமருந்து எதிர்ப்பு முகவரகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின்படி, இந்தியாவின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகவரகம் 7,113 இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளைச் சேகரித்தது.

இதில் 260 மாதிரிகள் ஊக்கமருந்து பாவனையை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தப் பட்டியலில் பிரான்ஸ் 91 வழக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், இத்தாலி 85 வழக்குகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ரஷ்யா மற்றும் அமெரிக்கா தலா 76 வழக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியாவில் கடந்த ஆண்டில் ஊக்கமருந்து பாவனை அதிகம் கண்டறியப்பட்ட துறைகளாக தடகளம் 76 வழக்குகள், பழுதூக்குதல் 43 வழக்குகள், மல்யுத்தம் 29 வழக்குகள் உள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துள்ள இந்திய ஊக்கமருந்து எதிர்ப்பு முகவரகம் , தாங்கள் சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாகவும், விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், ஊக்கமருந்து பாவனையைக் கட்டுப்படுத்த புதிய தேசிய சட்டமூலம் ஒன்றையும் இந்திய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## இந்திய அணிக்காக விளையாடிய பாகிஸ்தான் வீரர்




பக்ரைனில் கடந்த 16 ஆம் திகதி தனியார் அமைப்பு சார்பில் ஜி.சி.சி. கிண்ணத்துக்கான கபடி போட்டி நடத்தப்பட்டது. இதில் இந்தியா, பாகிஸ்தான், கனடா, ஈரான் போன்ற பெயரில் அணிகள் உருவாக்கப்பட்டு அதன் சார்பில் வீரர்கள் பங்கேற்றனர். பெரும்பாலான அணிகளில் அந்தந்த நாட்டை சேர்ந்தவர்களே இடம் பெற்றிருந்தனர்.

ஆனால் இந்திய அணியின் சார்பில் களம் இறங்கிய வீரர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்த சர்வதேச கபடி வீரர் உபைதுல்லா ராஜ்புத்தும் ஒருவர். அவர் இந்திய அணிக்குரிய சீருடை அணிந்தும், தேசிய கொடியை உற்சாகமாக அசைத்தப்படியும் இருக்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி அவருக்கு சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

இதனை கவனத்தில் கொண்டுள்ள பாகிஸ்தான் கபடி சம்மேளனம் அவர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது. இதற்காக வருகிற 27 ஆம் திகதி அவசர கூட்டத்தை கூட்டியுள்ளனர்.

பாகிஸ்தான் கபடி சம்மேளன செயலாளர் ராணா சர்வார் கூறுகையில், "இந்தியாவைச் சேர்ந்த வீரர்கள், இந்திய தனியார் அணியை பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆனால் அவர்களுக்காக உபைதுல்லா ஆடியதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் கபடி சம்மேளனத்திடமோ அல்லது பாகிஸ்தான் விளையாட்டு வாரியத்திடமே எந்த அனுமதியும் பெறாமல் சென்றுள்ளார். அவர் மட்டுமல்ல இவ்வாறு 16 வீரர்கள் பக்ரைன் சென்றுள்ளனர். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

உபைதுல்லா ராஜ்புத் கூறுகையில், "இது தனியார் போட்டி. இதில் இந்தியா, பாகிஸ்தான் பெயரை பயன்படுத்த வேண்டாம் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர்கள் இந்திய அணி என்று பெயரிட்டது கடைசி வரை எனக்கு தெரியாது. கடந்த காலங்களில் இந்தியா, பாகிஸ்தான் வீரர்கள் தனியார் அணிக்காக இணைந்து விளையாடி இருக்கிறார்கள். ஆனால் ஒரு போதும் இந்தியா அல்லது பாகிஸ்தான் பெயரில் விளையாடவில்லை. தவறுதலாக இந்தியாவின் பெயரில் விளையாடியதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்றார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 1.75 இலட்சம் ஹெக்டேயர் விவசாய நிலங்கள் சேதம்

## உணவுப் பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல்



(கொழும்பு) ....................

**பாதிக்கப்பட்ட நிலங்களில் உடனடியாக மீள்-விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கா விட்டால், இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என விவசாயத் திணைக்களம் எச்சரித்துள்ளது.**

இலங்கையைத் தாக்கிய அண்மைய கடும் சூறாவளி மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக நாட்டின் மொத்த விவசாய நிலங்களில் 7.6 சதவீதமான (1,75,000 ஹெக்டேயர்) நிலப்பரப்பு முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் அறுவடை மற்றும் உணவு உற்பத்தி மட்டத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், உள்ளூர் உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கும் வழிவகுத்துள்ளது. அனர்த்தத்தினால் நெற்பயிர்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 1.40 இலட்சம் முதல் 1.50 இலட்சம் ஹெக்டேயர் நெல் வயல்கள் அழிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் தகவல்களுக்கு அமைய, ஏற்கனவே கிராமப்புற குடும்பங்களில் 38 சதவீதமானோர் கடன் சுமையில் சிக்கியுள்ள நிலையில், இந்த அனர்த்தம் அதனை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

பெரும் போகத்திற்காகப் பாரிய அளவில் கடன் பெற்று விவசாயம் செய்த விவசாயிகள், தற்போது அறுவடை அழிந்துள்ளதால் கடனை மீளச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். (நி)

# மலையகத்தை விட்டு விட்டு வடக்கு கிழக்குக்கு செல்லத் தயாரில்லை

### பாராளுமன்றில் ராதாகிருஷ்ணன் எம்.பி



(கொழும்பு)

மலையகமே எமது தாயகம் அதனை கைவிட்டு வடக்குக்கோ,கிழக்குக்கோ நாம் செல்லத் தயாரில்லை என வேலுசாமி ராதாகிருஷ்ணன் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே, மலையகத்தில் வாழ்வதற்கான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.இது தொடர்பில் தோட்டக் கம்பெனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பாராளுமன்றத்தில் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பில்,தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் எந்தவித உறுதியான விடயங்களும் முன்வைக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, குடியிருப்பு, அவர்களுக்கான உரிமை தொடர்பில் அரசாங்கத்தின் அனைத்து எம்பிக்களும் ஒன்றிணைந்து குரல் கொடுத்தனர்.

இது மகிழ்ச்சியான விடயம். எனினும் தற்போது நிர்க்கதியாகியுள்ள அந்த மக்களுக்கு தற்போதைய அரசாங்கம் 07 பேர்ச் காணியை வழங்கி நிரந்தர வீடுகளையும் நிர்மாணித்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 100 கிலோ கஞ்சா பறிமுதல்

(சென்னை)

இந்தியா தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 1 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான 100 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடியை அடுத்த புதியம்புத்தூர் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட சிப்காட் பகுதியிலிருந்து கஞ்சா கடத்தப்பட உள்ளதாக, மாவட்ட கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை பொலிஸ் ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை சிப்காட் பகுதியில் தூத்துக்குடி துறைமுகம்-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அவ்வழியே வந்த கார், 2 பைக்குகளை நிறுத்திய போது அவற்றில் வந்த 4 பேரில் மூவர் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி மட்டக்கடை பகுதியைச் சேர்ந்த 33 வயதானவர் இதன்போது கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக 100 கிலோ கஞ்சா மூட்டைகளைக் கொண்டுவந்ததாகத் தெரிய வந்தது.

அதன் மொத்த மதிப்பு 1 கோடி இந்திய ரூபாய் எனக் கூறப்படுகிறது.

சந்தேகநபரை இதன் போது கைது செய்த பொலிஸார், கஞ்சா மூட்டைகள், வாகனங்களைப் பறிமுதல் செய்தனர்.

தப்பியோடிய 3 சந்தேக நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (நி)

# பசறையில் மண்மேடு சரிவு



(பதுளை)

பதுளை - பசறையிலிருந்து மடுல்சீமை ஊடாக பிட்டமாறுவ மற்றும் எக்கிரிய பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியில் குருவிகொல்ல 26 மைல் கல்லுக்கு அருகில் கற்பாறையும் மண்மேடும் சரிந்து வீழ்ந்துள்ளன.

இதனால், குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் பெய்த கடும் மழையின் காரணமாக மண்மேடு மற்றும் கற்பாறை சரிந்து வீழ்ந்ததாக குறிப்பிடப்படுகிறது. (நி)

# புலோலியில் 6 கோடி பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்பு

(கரணவாய்)

புலோலி பகுதியில் வீட்டினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 182 கிலோ கேரளக் கஞ்சா நேற்றைய தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.நெல்லியடி அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நெல்லியடி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 6 கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியான 182 கிலோ கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

அத்துடன் பெண் ஒருவர் உட்பட மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிற நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில்- மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது.
(படங்கள் - சிவசாந்தன்)

# உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு, வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவி வெற்றிடங்கள் திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறையின் கீழ், கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் நிரப்பப்படவுள்ளதுடன், இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.01.05 ஆகும்.

முழுமையான அறிவித்தல் மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.np.gov.lk எனும் இணையத் தளத்தில் "Exam and Recruitment - Advertisement" எனும் பகுதியின் ஊடாகப் பார்வையிட முடியும். தகைமையுடைய விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறியத் தந்துள்ளார். (8)

# சரசாலை பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொது நூலகம் நடத்தும் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலய சுப்பையா அரங்கில் நடைபெறவுள்ளது

சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பொன்னையா குகதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பிரதி அதிபர் கஜேந்தினி மஹிந்தனும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலய அதிபர் சொலமன் ஜேசுதாஸும் சரசாலை கிராம அலுவலர் செல்வரமா நவாஸ்கனும் கலந்து கொள்ளவுள்ளனர். (8-33)

# சாவகச்சேரி பிரதேச சபை பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்ட முன்மொழிவு அமர்வு, தவிசாளர் பொன்னையா குகதாசன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தவிசாளர் பாதீட்டை சமர்ப்பித்து உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

தமிழரசின் ஆட்சியில் உள்ள சாவகச்சேரிப் பிரதேச சபையானது 28 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது..

இதில் தமிழரசுக் கட்சி 8 உறுப்பினர்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 6 உறுப்பினர்களையும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு 5 உறுப்பினர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலா ஒவ்வொரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

மேற்படி சபை அமர்வுக்கு 25 உறுப்பினர்கள் வருகை தந்திருந்த நிலையில் அனைவரதும் ஆதரவோடும் பாதீடு நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமைகோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரப் பெட்டிகள், மோட்டார் லொறிகள், இரட்டைப் பாவனை வாகனம், துவிச்சக்கர வண்டிகள், 36 கியூப் மணல், மற்றும் ஏனைய பொருட்கள் (கத்திகள், கோடரிகள், மண்வெட்டிகள், சவள்கள், தலைக்கவசங்கள் மற்றும் ஏனைய பொருட்கள்) 23.12.2025 மற்றும் 24.12.2025 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

எனவே குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்.

மேலும் பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப்பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 26.12.2025 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும்.

ஏலவிற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய பொருட்களை அன்றைய தினமே நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# இந்து இளைஞர் மன்றத்தின் நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய முன் பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன், சிறப்பு விருந்தினராக யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை அதிபர் க.கலைக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

# திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரான திருவாசகம் முற்றோதல் வைபவமானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. (8)

# வாசிப்பு மாத நிறைவு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொதுநூலகம் (உரும்பிராய்) வாசிப்பு மாத நிறைவு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி சிவசுப்பிரமணியம் கைலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை (புத்தூர்) தவிசாளர் தியாகராஜா நிரோஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை (புத்தூர்) செயலாளர் இராமலிங்கம் பகீரதன், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் திருமதி சசிரேகா சுயதீப், கௌரவ விருந்தினராக உரும்பிராய் கற்பக விநயாகர் ஆலய தலைவர் சி.சிவராம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகளை தாண்டிய மனிதாபிமானம்

# உலகெங்கிலும் இருந்து இலங்கைக்கு நிதியுதவி

(கொழும்பு)

**"டித்வா" சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிறுவப்பட்ட Rebuilding Sri Lanka நிதியத்திற்கு இதுவரை 42 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.**




திறைசேரியின் கணக்குகளின்படி, இதுவரை மொத்தம் 43,286 மில்லியன் ரூபாய் பங்களிப்புகள் பதிவாகியுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதில் 4,263 மில்லியன் ரூபாய் நேரடியாக வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 23 மில்லியன் ரூபாய் வெளிநாட்டு நாணயமாகக் கிடைத்துள்ளாக அவர் தெரிவித்தார்.

மேலும் வெளிநாட்டு நாணயப் பங்களிப்புகள் மாத்திரம் 6 மில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டியுள்ளது.

இந்த நிவாரணப் பணிகளில் இந்தியா வட அமெரிக்கா முதலி டத்தில் உள்ளது.

அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, சீனா, பிரித்தானியா, ஜேர்மனி, பூட்டான், இத்தாலி, ஐக்கிய அரபு இராச்சியம், கனடா, நியூசிலாந்து, மாலைதீவு, சவுதி அரேபியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் நிதியுதவி வழங்கியுள்ளன.

நிதியுதவி மற்றும் மானியங்களை வழங்கிய நாடுகளில் தென்கொரியா முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகள் இலங்கையின் மறுசீரமைப்புப் பணிகளுக்கு உதவுவது குறித்து பரிசீலித்து வருகின்றன.

அத்துடன் நிதி தவிர, பெருமளவிலான பொருட்களும் சேவைகளும் நன்கொடையாகக் கிடைத்துள்ளன.

இவை இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு, பின்னர் இடர் மேலாண்மை நிலையத்தின் ஊடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக விநியோகிக்கப்படுவதாக செயலாளர் உறுதிப்படுத்தினார்.

இந்த மனிதாபிமானப் பணிகளுக்கான பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நோய் பரவலை கட்டுப்படுத்தும் இலங்கையின் நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு



(டில்லி)

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நோய் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளை உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் பாராட்டியுள்ளார். பாரம்பரிய மருத்துவம் குறித்து உலக சுகாதார அமைப்பின் இரண்டாவது உலகளாவிய மாநாடு கடந்த புதன்கிழமை புதுடில்லி பாரத் மண்டபத்தில் ஆரம்பமானது. மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ கலந்துகொண்டார்.

இதன் ஒரு அங்கமாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ்"டனும் அமைச்சர் சந்திப்பில் கலந்து கொண்டார். இச்சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாநாட்டு அரங்கில் நடைபெற்றது. பேரழிவின் பின்னர், சுகாதார சேவைகளை தொடர்ந்து வலுப்படுத்தவும் அவசர உதவிகளுக்கும் மற்றும் தேவையான போது சிறப்பாக வழிகாட்டியமைக்கும் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்திருந்தார்.

பேரிடருக்கு பின்னர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பிலும் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் அமைச்சரிடம் கேட்டறிந்தார்.

அனர்த்தத்திற்கு பின்னரான நடவடிக்கைகளை அரசாங்கம் முறையாக மேற்கொண்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் மக்கள் மத்தியிலும் தொற்று நோய்கள் ஏற்படவோ அல்லது பரவவோ கூடாது என்பதில் அரசாங்கம் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் அமைச்சர் விளக்கினார்.

பாரம்பரிய மருத்துவத்திற்கான சான்றுகள், ஒருங்கிணைப்பு மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்காக, இந்திய அரசின் ஆயுள் அமைச்சுடன் இணைந்து உலக சுகாதார அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டில், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், விஞ்ஞானிகள், பழங்குடித் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி)

## வைத்தியர் ருக்ஷான் பெல்லன அதிரடியாகப் பணி இடைநீக்கம்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லனவை உடனடியாகப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்ய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதற்கட்ட விசாரணையில் பொறுப்பான பதவியில் அரச மருத்துவ அதிகாரியாக இருந்த வைத்தியர் ருக்ஷான் பெல்லன முன் அனுமதியின்றி ஊடகங்களுக்கு அறிக்கைகளை வெளியிட்டது தெரியவந்ததாக அமைச்சின் கடித தலைப்பின் கீழ் முறையான கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கைகள் பொது மக்களிடையே சர்ச்சையையும் அமைதியின்மையையும் உருவாக்கியதாக கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக உரிய நேரத்தில் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)


## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் சிற்றுண்டிச்சாலை கேள்வி மனுக்கோரல் - 2026

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய சிற்றுண்டிச்சாலை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றது.

கேள்வி மனுக்கோரலின் போது ஒரு விண்ணப்பப் படிவத்துக்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூபா 500 (அரசவரி உட்பட) பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 22.12.2025 தொடக்கம் மு.ப 9.00 மணி- பி.ப 1.30 மணி வரை உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 30.12.2025 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் என்னும் முகவரிக்கு சேர்த்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலையை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் - 2026" எனக் குறிப்பிடல் வேண்டும்.

ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகோரல் மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

(C-4628)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய எண்ணெய் கப்பல்களுக்கு அதிரடி தடை விதித்த அமெரிக்கா!

## மத்திய கிழக்கில் பதற்றம்



**(வோஷிங்டன்) ..............................**

**ஈரானிய பெற்றோல் மற்றும் பெற்றோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் 29 கப்பல்கள் மற்றும் அதன் தொடர்பு நிறுவனங்கள் அனைத்தின் மீதும் அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இந்த திடீர் நடவடிக்கையால் ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

முறைகேடான கப்பல் போக்குவரத்து நடைமுறைகள் மூலம் நூற்றுக் கணக்கான மில்லியன் டொலர் மதிப்புள்ள பொருட்களைக் கடத்தியதாக குற்றம் சாட்டியே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க கருவூலத் துறை தெரிவித்துள்ளது.

shadow fleet என அடையாளப்படுத்துகின்ற, எண்ணெய் நிறுவனங்களில் இருந்து ஏற்றுமதிகளை முன்னெடுக்கும் கப்பல்களுக்கே அமெரிக்கா தடை விதித்துள்ளது.

குறித்த கப்பல்கள் அனைத்தும் காலாவதியானவை. அவைகளின் உரிமையாளர் யார் என்பதை உறுதி செய்ய முடியவில்லை. எண்ணெய் நிறுவனங்களுக்கும் பல துறைமுகங்களுக்கும் தேவையான சர்வதேச தரநிலைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான உயர்தர காப்பீட்டுப் பாதுகாப்பு இல்லாமல் செயற்படுபவை என அமெரிக்கா குற்றம் சாட்டுகின்றது.

இதற்கிடையில், அமெரிக்க கருவூலத் துறை ஈரானின் இராணுவ மற்றும் ஆயுதத் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தும் பெட்ரோலிய வருவாயைத் தொடர்ந்து முடக்கும் என குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஈரானின் அணு சக்தித் திட்டம் மற்றும் மத்திய கிழக்குப் பகுதி முழுவதும் பயங்கரவாதப் பிரதிநிதிகளுக்கு அது அளிக்கும் ஆதரவு ஆகிய காரணங்களுக்காக, ஈரான் மீது தடைகளை விதிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# க்ரீன் கார்ட் திட்டத்தை உடனடியாக நிறுத்திய ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், க்ரீன் கார்ட் திட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழகம் மற்றும் எம்.ஐ.டி ஆகியவற்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் தொடர்புடையதாகக் கருதப்படும் சந்தேக நபர், இந்த விசா குலுக்கல் முறையிலேயே 2017 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்குள் நுழைந்தது கண்டறியப்பட்டது.

48 வயதான போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த இவர், க்ரீன் கார்ட் பெற்று சட்டபூர்வமாக தங்கியிருந்தவர் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, உள் நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோம், ஜனாதிபதி ட்ரம்ப்பின் உத்தரவின் பேரில் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளார்.

இத்தகைய கொடூரமான நபர்கள் ஒருபோதும் நமது நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது என அவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50,000 பேருக்கு குலுக்கல் முறையில் அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்குவதற்கான க்ரீன் கார்டுகளை வழங்குகிறது.

2025 ஆம் ஆண்டுக்கான குலுக்கல் திட்டத்திற்கு சுமார் 2 கோடி பேர் விண்ணப்பித்திருந்தனர்.

தற்போது இந்த நிறுத்தம் காரணமாக அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

ஜனாதிபதி ட்ரம்ப் நீண்டகாலமாகவே இந்த விசா குலுக்கல் முறையை விமர்சித்து வருவதுடன், இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும், தகுதி அடிப்படையிலான விசா முறையே சிறந்தது என்றும் கூறி வருகிறார்.

இந்தத் தடை தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பது குறித்து மேலதிக சட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

# செயற்கை நுண்ணறிவால் வேலையின்மை அதிகரிப்பு

### இங்கிலாந்து வங்கி எச்சரிக்கை!

(லண்டன்)

தொழில்துறை புரட்சியின் போது காணப்பட்டதைப் போலவே, செயற்கை நுண்ணறிவு (AI) பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுவது தொழிலாளர்களை வேலைகளிலிருந்து வெளியேற்றுவதற்கான வாய்ப்பாக அமையும் என்று இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் எச்சரித்துள்ளார்.

பொருளாதாரம் முழுவதும் செயற்கை நுண்ணறிவு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் நிலையில், தொழிலாளர்களை அதிகளவில் தொழில் நுட்பத்தில் ஈடுபடுத்த உதவுவதற்காக ஐக்கிய இராஜ் ஜியம் செயற்கை நுண்ணறிவு பயிற்சி, கல்வி மற்றும் திறன்களில் முதலீடு செய்வது அவசியம் என்றும் இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் ஆண்ட்ரூ பெய்லி கூறினார்.

அந்த அடித்தளங்கள் இல்லாமல் போனால் தொழிலாளர் சந்தை மேலும் துண்டு துண்டாக உடையும் அபாயத்தை எதிர்கொள்ளும் என்றும் அவர் எச்சரித்தார்.

அண்மைய ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

மேலும் வணிகங்கள் மற்றும் பொதுத்துறையினரால் இது அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இந்த தொழில்நுட்பம் கணினிகள் அதிக அளவிலான தரவை செயலாக்கவும், வடிவங்களை அடையாளம் காணவும், அந்தத் தகவலை என்ன செய்வது என்பது குறித்த விரிவான வழிமுறைகளைப் பின்பற் றவும் அனுமதிக்கிறது.

இருப்பினும், இது ஏற்கனவே வேலைவாய்ப்பு சந்தையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து இங்கிலாந்தில் கவலைகள் அதிகரித்துள்ளன.

இந்த வாரம் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள், ஒக்டோபர் மாதத்துடன் முடிவடைந்த கடந்த மூன்று மாதங்களில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் வேலையின்மை விகிதம் 5.1% ஆக உயர்ந்துள்ளதை வெளிக்காட்டியது. இதில் அதிகளவானோர் இளைய தொழிலாளர்கள் ஆவர்.

ஒக்டோபர் மாதம் வரையிலான கடந்த மூன்று மாதங்களில் 18 முதல் 24 வயதுடைய வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 85,000 ஆக அதிகரித்துள்ளது.

இது நவம்பர் 2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிகப்பெரிய வேலையின்மை உயர்வு என்று இங்கிலாந்தின் தேசிய புள்ளிவிவர அலுவலகம் தெரிவித்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்தாபகர்
சி.யோ.செல்வநாயகம்

# ஆசீர் வணிக நிலையம்
# ASEER VANIGA NILAIYAM

அனைத்துவிதமான
**காகிதாகிகள் மற்றும்**
**பாடசாலை உபகரணங்களையும்**
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

Atlas
LINC
Dumindu
TEN
NATARAJ
Double A
Homerun
ProMate
world stationer






அன்பார்ந்த
வாடிக்கையாளர்களே!
வேறெங்கும் இல்லாத
வகையில் நம்பகத்தன்மையாக
தரமான மற்றும்
மலிவு விலையுடன் கூடிய
அனைத்து வகை
அப்பியாசக் கொப்பிகளை
எம்மிடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.



(C-4616)

**அநேகர் வழங்குவது போல நிபந்தனைக்குட்பட்ட**
**இலவசங்களை எமது நிறுவனம் வழங்குவதில்லை**
**என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்**

202A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5485 , Fax: 021 222 2842


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEWMAS 5th Year Anniversary

## வேலைவாய்ப்புகள் (Vacancies)

| | | | |
|---|---|---|---|
| Data Entry Operator (Pharmacy) | 075 221 7661 | வீட்டுப்பணிபெண் | 076 462 1890 |
| Driver (சாரதி) | 076 422 1761 | Cash Collector (Vavuniya) | 077 712 4144 |
| Accountant | 077 614 0860 | துப்பரவு பணியாளர் | 076 096 4456 |
| Cashier | 070 779 9234 | Office Clerk (Colombo) | 076 886 0904 |
| Receptionist | 076 324 2881 | தோட்ட வேலையாட்கள் | 077 851 5695 |
| Call Centre Staff (Female) | 074 049 5708 | Graphic Designer (Kilinochchi, Jaffna) | 021 223 1644 |
| Managers (150,000/=) | 076 602 1594 | சமையலாளர் | 076 461 2342 |
| Online Sales Assistant | 076 704 2891 | Office Staff (Vavuniya) | 077 724 2713 |
| IT Assistant | 077 458 1078 | தையல் தெரிந்தவர்கள் (Jaffna) | 076 635 0560 |
| Front Office Staff | 076 946 4568 | Type Setting | 077 774 6855 |
| Delivery Riders | 077 077 7031 | விற்பனையாளர் | 070 779 9234 |
| Account Assistant | 076 096 4456 | Management Assistant | 070 222 2366 |
| Supervisor | 076 324 2881 | ஆலோசகர்கள் | 077 353 0310 |
| Store Keeper | 077 671 1473 | Store Assistant | 076 096 4456 |
| Voice Over, Video Creator | 076 704 2891 | புத்தக கட்டுனர் | 077 711 1212 |
| Assistant Sales Manager | 077 017 5674 | Marketing Executive | 077 358 0547 |
| Site Engineer | 077 990 9397 | மருந்தாளர் | 076 489 8686 |
| Management Assistant | 077 017 5674 | Room Boy | 077 548 9947 |
| Technical Officer | 077 990 9397 | சமையலறை உதவியாளர் | 076 461 2342 |
| Crew Members | 075 503 4588 | Team Leader | 077 934 8512 |
| Indian Cook | 076 803 5352 | கணனி தட்டெழுத்தாளர் | 077 711 1212 |
| Corel Row Designing | 077 833 8625 | Sales Assistant | 076 218 7234 |
| Video Graphy | 077 604 0400 | அப்பம் போடுபவர் | 077 724 2713 |
| Sales person | 077 855 4840 | Waiter | 077 956 7526 |
| Group Leaders | 077 017 5674 | முகாமையாளர் | 071 535 4500 |
| Pharmacy Assistant | 076 635 0560 | Phone Repair | 077 361 1282 |
| Medicine Store Assistant | 075 221 7661 | கணக்காளர் | 074 123 5110 |
| Kitchen Helper | 076 803 5352 | Counter Sales Assistant | 075 221 7661 |
| Sales manager (80,000/=) | 077 666 0710 | Cashier (காசாளர்) | 076 635 0560 |
| Indian Chef | 077 723 6196 | All Rounder | 076 070 9751 |
| Hospitality Manager | 077 956 7526 | Packing (பக்கிங்) | 070 252 2665 |
| Collection Officer | 076 182 4729 | Assistant Sales manager | 077 666 0710 |
| Cook /Commi | 076 461 2342 | Cleaning Staffs (கிளீனிங்) | 070 766 9966 |
| Sales Person | 075 858 8218 | Video Editing | 077 604 0400 |
| Kitchen Helper | 077 548 9947 | Waiter (வெயிட்டர்) | 077 273 6333 |
| Social Media Handling (Jaffna) | 076 201 3384 | Admin & Finance Assistant | 070 766 9966 |
| Rotty maker | 076 751 8694 | சமையலறை உதவியாளர்கள் | 074 323 2334 |
| Salesman | 076 787 8676 | Office Assistant | 075 458 1078 |
| Technician | 076 100 0231 | Cashier | 077 269 1949 |
| House Keeping with Security Guard | 077 779 0111 | Driver | 077 671 1473 |
| Pharmacy Assistant | 077 313 4760 | Chef | 076 889 9071 |
| Packing | 077 116 8958 | Kitchen Helper | 074 319 5767 |
| Team Leader (80,000/=) | 076 711 2102 | Beautician | 077 303 4425 |
| Cashier | 074 323 2334 | Business Manager | 070 298 9162 |
| Leasing Officer | 077 361 1282 | Sales Agent | 076 128 7897 |
| Sales Rep | 077 388 3879 | Internal Security Officers | 070 766 9966 |
| Kitchen Helper | 076 461 2342 | Digital Marketing Social Media Operator | 077 237 8842 |
| Back Office (Manipay) | 076 128 7897 | | |

மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

வேலையாட்கள் தேவையா? 076 098 4532 / 074 138 3368

(6332)

DEWMAS, 51, Amman Road, Nallur


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நீடித்து வாழ்க
# வலம்புரி !!!




## வடமராட்சி
## மக்களின்
### ஆரோக்கியத்தின்
# 24
## மணி நேர
## காவலன்

## ரூபின்ஸ் வைத்தியசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
## රූබින්ස් රෝහල (පෞද්ගලික) සීමාසහිත
## RUHBINS HOSPITAL (PRIVATE) LIMITED

Hotline: +9421 226 1500 / +9421 492 7232

(C-4617)

160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம், இலங்கை.
160, පේදුරුතුඩුව පාර, නෙල්ලියඩි, යාපනය, ශ්‍රී ලංකා.
160, Point Pedro Road - Nelliady, Jaffna - Sri Lanka.

+9421 226 1500 / +9421 492 7232
www.ruhbinshospitals.com

Ruhbins Hospital

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTHERN UNI

SLIIT

EXPERIMENT. EXPERIENCE. EXCEL



Advanced Diploma to Degree in One Year

# ELECTRONIC ENGINEERING

**NOW ENROLL FOR THE TOP-UP DEGREE**

From University of Bedfordshire, UK

**வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலை வாய்ப்பு**
**NORTHERN UNI இல் மட்டுமே!**

## BSc (Hons) in Information Technology - Specialising in

- Artificial Intelligence
- Information Technology
- Software Engineering
- Data Science
- Cyber Security

(3 Passes in Sri Lankan/London A/L any stream)

## SLIIT CITY UNI Programmes

- Higher Diploma in Information Technology
- Higher Diploma in Business Management

( At least 1 Pass in Sri Lankan/London A/L any stream with Credit Pass(C) in O/L English )

Top-Up, (1 Year) (University of Bedfordshire,UK)

## BSc (Hons) in

- Artificial Intelligence & Robotics
- Cyber Security
- Computer Science
- Information Technology
- Software Engineering
- Computer Networking

(HND in Related Field with Credit Pass (C) in O/L English)

## BBA(Hons) Specialising in

- Accounting and Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Logistics and Supply Chain Management
- Marketing Management

(3 Passes in Sri Lankan/London A/L any stream)

## Foundation Programmes (1 Year)

- Certificate in Information Technology
- Certificate in Business Management

(At least 6 Passes in O/L with Credit Pass (C) for English & Mathematics)

Top-Up, (1 Year) (University of Bedfordshire,UK)

## BSc (Hons) in

- Business Management
- Business Management with Business Analytics
- Business Management with Digital Marketing

(HND in Related Field with Credit Pass(C) in O/L English)

(C-4629)

SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna

021 7534 807

northernuni.lk admissions@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 26 ஆம் ஆண்டு நி



## வீணாகான குருபீட முதல்வரின் ஆசிச்செய்தி

தமிழ் கூறும் நல்லுலகின் இதயம் நிறைந்த நாளிதழ் வலம்புரி 27 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்ற இந்நாளில் வாழ்த்தி ஆசிர்வதிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம். வலம்புரி நாளிதழ் கடந்து வந்த காலங்களை எண்ணுகையில் வியப்படைகின்றோம். தான் பெற்ற பல இன்னல்களுக்கு வேறு எவராயினும் இருந்தால் இருந்த இடம் தெரியாது மறைந்திருப்பார்கள், ஒளிந்திருப்பார்கள். தர்மத்தின் கட்டளையாக தனது பணிகளை ஆற்றுவதனால் எவருக்கும் எக்காலத்திலும் அடிபணியாது வலம்புரி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அதற்கு இறையருள் துணைநிற்பதோடு வலம்புரியில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் அதற்குப் பலமாகிறது.

மக்களைக் கவர்ந்து இழுக்கவேண்டும் என்னும் நோக்கிலும் பத்திரிகை அதிக வியாபாரம் அடைய வேண்டும் என்னும் நோக்கிலும் பொய்யான தரம் கெட்ட கருத்துக்களையும் செய்திகளையும் எச்சந்தர்ப்பத்திலும் வெளியிடாமல் தர்மத்தின் ஒலியாக ஓங்கி ஒலித்து வருகின்றது. மக்களுக்கு கடமைகளை காலம் அறிந்து தகுந்தாற் போல் எடுத்துரைப்பதிலும் வலம்புரிக்கு நிகர் வலம்புரியாகும்.

உண்மையை மக்களிடம் சரியான தருணத்தில் கொண்டு செல்கின்றது. தான் கொடுக்கும் செய்தியால் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றது. அத்துடன் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அற்புதமான ஆசிரிய தலையங்கத்தினூடாக தீர்வினை முன்வைக்கின்றது. அத்தலையங்கமானது ஆலோசனையாக-கட்டளையாக-விழிப்புணர்வாக-பரிந்துரையாக-எதிர்வுகூறுவதாக-ஆரோக்கியமான விமர்சனமாக பல்வேறு பரிணாமம் கொண்டு வெளியாகும் ஒரே ஒரு பத்திரிகையாக காணப்படுகிறது.

தனது கருத்தின் மூலம் மக்களை மென்மேலும் குழப்பி விடாது பிரச்சினைகள் குறித்து மக்களுக்கு தெளிவான புரிதலை தருகின்றது. நாட்டில் நடக்கும் நல்லது கெட்டதை வெளிச்சம் போட்டுக்காட்டி நல்ல மாற்றங்களுக்கு வித்திடுகின்றது. கல்வி, கலை, கலாசாரம், சுகாதாரம், வர்த்தகம், விவசாயம், ஆன்மீகம், ஆலயம் என அனைத்து விடயங்களிலும் அக்கறை கொண்டு தனது வெளியீடுகளை மலரச்செய்கின்றது வலம்புரி.

செய்தியைத் தருவதுதான் தனது கடமை என எண்ணாது சமூகத்தின் நலனில் அதீத அக்கறையுடன் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்ற பத்திரிகை வலம்புரி தனது நேர்மையான கருத்துகளால் இன்று அதிக மக்களால் கவரப்பட்டு வலுப்படுத்தப்பட்ட ஓர் அசைக்க முடியாத மக்களின் - தர்மத்தின் காவலனாக சைவத்தமிழ் மக்களின் சுதந்திர தூணாக 27 ஆவது ஆண்டில் தலை நிமிர்ந்து நிற்கின்றது வலம்புரி நாளிதழ்.

பிரதம ஆசிரியர் மற்றும் வலம்புரி குடும்பத்தினரது நேர்மையான அயராத பணிகளுக்கு கிடைத்த பெரு வெற்றியே இந்த 26 வருட பூர்த்தியாகும். இவர்களது பணி தொடரட்டும். மக்கள் நலமுற பயனடையட்டும் இவை அனைத்திற்கும் இறையருள் துணை நிற்கட்டும் என வாழ்த்தி ஆசிர்வதித்து நிறைவு செய்கின்றோம்.

**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்,**
**சரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில்,**
**சண்டிலிப்பாய்.**



## அறம் காக்கும் நாளிதழ்

ஊடகத்துறையில் 26 வருடங்கள் கடந்து சாதிக்கும் வலம்புரி பத்திரிகை யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு துணிச்சலுடன் அறம் காக்கும் நடுநிலை பத்திரிகையாகும்.

இன்றைய ஊடக யுகத்தில் மிகவும் இன்றியமையாததும் நம்பகமானதுமான தகவல்கள், அறிக்கைகள், கருத்துக்களை வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் கால் நூற்றாண்டைக் கடந்து வீறு நடை போடுகின்றது.

வலம்புரியின் முகாமைத்துவம், ஆசிரியர்கள், பணிக்குழுவினர் பத்திரிகையின் வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களுக்கு வாசகர்கள் சார்பில் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

26 ஆவது ஆண்டு நிறைவில் வலம்புரி, வாழ்க! வளர்க!

மேலும் பொன் விழா, வைர விழா, பவள விழா, நூற்றாண்டு விழா கொண்டாட வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம்**
**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்.**



## சமூகப் பொறுப்புடன் கருமமாற்றும் நாளிதழ்

வெள்ளிவிழாவை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இன்று 27 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மக்களின் மனங் கவர்ந்த பத்திரிகை "வலம்புரி" தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் முன்னின்று செயலாற்றும் பத்திரிகை.

இன்றைய காலகட்டத்தில் மிகவும் சமூகப் பொறுப்புடன் வினைத்திறமையாகச் செயற்பாடுகளை மேற்கொள்வது போற்றுதற்குரியது.

வடமாகாணம் முழுவதும் தனது வாசகர்களைக் கொண்டு தனக்கென ஒரு தனியிடத்தை தக்கவைத்த நாளிதழ். பத்திரிகை ஒன்றின் அடிப்படை நோக்கங்களான அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்ச்சியடையச் செய்தல் ஆகிய கருமங்களை செவ்வனே ஆற்றுவதும் வலம்புரிப் பத்திரிகை.

அரசியல், கலை, கலாசார மேம்பாடுகளையும் சமய விழுமியங்கள் சார்ந்த அறநெறிகளையும் இளையோரிடையே எடுத்துச் செல்லும் ப்ணியை நேர்த்தியாக நிறைவேற்றிவருகின்றது. ஆன்மீகச் செறிவை மக்களிடையே பரப்புவதில் காத்திரமான பங்களிப்பை செய்வதில் பத்திரிகை உலகில் வலம்புரி தனியிடம் வகிக்கின்றது.

மிகக் குறைந்த கட்டணங்களில் விளம்பரப் பணியை முன்னெடுப்பதால் பொருளாதாரம் நலிந்த மக்களின் மனங்கவர்ந்த பத்திரிகையாக விளங்குகின்றது.

இன்றைய நெருக்கடி மிகுந்த உலகியல் போக்கிற்கேற்ப சமூகப் பொறுப்பை வினைத்திறமையுடன் நிறைவேற்றுவதுடன் பத்திரிகை தர்மத்தையும் கடைப்பிடிக்கும் "வலம்புரி" சூரியசந்திரர் உள்ள காலம் வரை செழிப்புற்றோங்க இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாநிதி, பண்டிதர்**
**சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
**தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**



## யாழ்.மாவட்ட அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

எழில் மிகு ஈழமணித்திருநாட்டில் தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்று நடுநிலை தவறாத நாளிதழாக மலருகின்ற வலம்புரிப் பத்திரிகை தனது இருபத்தாறாவது அகவை நிறைவைக் காண்பதனை முன்னிட்டு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் புளகாங்கிதம் அடைகின்றேன்.

சமூக நிகழ்வுகள், அனர்த்தங்கள், உண்மைச் சம்பவங்கள், அரசியல் செய்திகள், வணிகச் செய்திகள் போன்ற தகவல்களை மட்டுமல்லாது பொது அறிவு சார்ந்த விடயங்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் இடம்பெறுகின்ற அனைவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் எனப் பல்வேறு விடயங்களைத் தன்னகத்தே உள்ளடக்கி நடுவு நிலையோடு இப் பத்திரிகை வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கல்வி, விளையாட்டு, கலாசாரம் தொடர்பான விடயங்கள், பயனுள்ள விளம்பரங்கள் அணி செய்ய வெளிவரும் இப் பத்திரிகை தமிழ் மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்ற நாளிதழாக மிளிர்கின்றமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களின் போது தமிழர்களின் குரலாக மக்கள் அறிய வேண்டிய விடயங்களையும் நாட்டு நடப்புகளையும் உடனுக்குடன் வெளிக் கொண்டு வந்தமை சிறப்புக்குரியது.

தமிழ்ப் பத்திரிகை உலகில் தனக்கென ஓர் தனித்துவத்தைத் தக்க வைத்துள்ள இப் பத்திரிகையின் ஓர் பாகமாக "சங்குநாதம்" வாரத்தின் இறுதி நாளில் ஆய்வுக் கட்டுரைகள், அறிவியல் விடயங்கள், மாணவர்களுக்குப் பயனுள்ள கல்வி, தேர்வு சார் விடயங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றமை வரவேற்கத்தக்கது.

தமிழ் மக்களின் ஒலியாக வெளிவரும் வலம்புரி நாளிதழின் இருபத்தாறாவது அகவை நிறைவுச் சிறப்பிதழ் நறுமணங் கமழ மலரவும் இப் பத்திரிகை மேன்மேலும் பல்லாண்டுகள் வெளிப்படையான, நேரிய தன் பணியைத் தடையேதுமின்றித் தொடர்ந்திடவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்,**
**அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**



## செ

எம் ம
காலமாக
உன்னத
பத்திரிகை
கண்ட இ
உயர்ந்த
பத்திரிகையாகத் திகழ்கிறது.

இப் பத்திரிகையின் ஆண்டுவி
திப்பதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். எ
சாராமல் நடுநிலையில் நின்று, பொ
வரும் இப்பத்திரிகையின் சிறப்பின
இப்பத்திரிகையின் ஆசிரியத் தலைய
பலர் வலம்புரி ஆசிரியர் கருத்தி
எடுத்துரைப்பது வழக்கமாகிவிட்டது
விடயதானங்களை வெளிப்படுத்தும்
பத்திரிகைக்குப் பேராதரவு வழங்கி

வாரந்தோறும் ஞாயிறு வலம்புரி
பேராவலைத் தூண்டிவருகிறது. "
மாநாடாகக் கருதப்படுகிறது. சம்பாசன
சமூகத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள
வகையில் எடுத்தியம்புகின்றன. மண்
நாம் இழக்கும் போது அவர்களை நி
அஞ்சலி செலுத் தப்படுவது நன்றிக்குரி

அரசியல் விடயங்கள் முதல் ஆன்
வரலாறு, ஜோதிடம், அறிவுரை, வியா
திரமானவை. அபிமன்யு எழுதும் ய
தெளிவானவை. வலம்புரி பிரதம
திரு.க.திருமாலழகன் ஆகியோரி
முகாமைத்துவக் குழு, செய்திபீடம் மற்
ஒத்துழைப்பும் வலம்புரியை எம் மண்
வந்துள்ளது. நாளும் பொழுதும் த
பத்திரிகை எம் இனத்தின் எதிர்காலம்
கள் ஒன்றுபட்டு உழைக்க வே
சொல்லிவருகிறது. மண்ணின் அ
காங்கே குரல் கொடுத்து வருகிறது.
வாசகர்களின் வாழ்த் துக்களோடு சூரி
வாழ்த்தி அமைகின்றேன்.

**தலைவர்,ஸ்ரீதுர்க்காதேவி தே**
**சிவபூமி**



## கிளி
## அதி

வலம்பு
தினம் 27
கும் இவ்
பாராட்டுக்
வதுடன்
செய்திப்
இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மகிழ்வான இந்த தருணத்தில் வ
குடும்பத்தின் நிர்வாகிகள், முகாமை
செய்தியாளர்கள் மற்றும் பணியா
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்

ஒரு பத்திரிகையை நடத்துவ
போடுவதை போன்றது" என தினத்த
ஆசிரியருமான சி.ப.ஆதித்தனார் தெ
வலம்புரி பத்திரிகையானது கால்நூ
பயணித்துக் கொண்டிருக்கின்றமை
வேண்டிய ஒரு விடயமாகும்.

கடந்தகாலப் பத்திரிகைகளின்
சரித்திரப் பின்னணியைக் கொண
சவால்களைச் சந்தித்து சாதனைக
செய்திப் பணியாற்றி வருகிறது. "ந
காக்கும் உங்கள் நாளிதழ்" எனும்
பத்திரிகையாக வெளிவரும் வல
வடிவத்திற்கு வாசகர் மத்தியில் ஒரு

வலம்புரி பத்திரிகையானது
அனுபவங்களுடன் மக்களின் குரலா
நீண்ட காலங்கள் நீடித்து செய்திப்
வேண்டி அமைகிறேன்.

**அரசாங்க அ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவு சிறப்பு மலர் – 20.12.2025

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

மண்ணில் கடந்த 26 ஆண்டு
க உள்ளதை உள்ளவாறு கூறும்
தப் பத்திரிகையாக "வலம்புரி"
கை விளங்குகிறது. வெள்ளி விழாக்
இப் பத்திரிகை கற்றோர் மத்தியில்
து மதிப்பைப் பெற்ற உன்னதப்

விழாக் குறித்து வாழ்த்தி ஆசீர்வ
. எந்தவொரு அரசியல் கட்சியையும்
பொது அறங்களை எடுத்துரைத்து
னை அறியாதவர்கள் இல்லை.
லயங்கம் பலரைக் கவர்ந்துள்ளது.
த்தினைத் தங்கள் முகநூலில்
து. மிக நாகரிகமான முறையில்
ம் திறன் கண்டு மக்கள் வலம்புரிப்
வருகிறார்கள்.
ரியின் "சங்குநாதம்" வாசகர்களின்
"ஆலடி மாநாடு" அர்த்தமுள்ள
சனையில் பேசப்படும் விடயங்கள்
களை உரியவர்கள் சிந்திக்கக்கூடிய
ண்ணுக்குப் பயனான மனிதர்களை
நினைவுகூர்ந்து ஆலடி மாநாட்டில்
குரிய செயலாகும்.
ன்மீகம், மருத்துவம், விவசாயம்,
பாசர் பதில்கள் யாவும் மிகவும் காத்
யதார்த்தமான அரசியல் சூழல்கள்
ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம்,
ரின் சிறந்த ஆற்றுப்படுத்தலும்
மற்றும் பணியாளர்களின் பரிபூரண
ண்ணில் உச்சநிலைக்குக் கொண்டு
தர்மத்தை எடுத்துரைக்கும் இப்
லம் தொடர்பாக, எம் அரசியல்வாதி
வண்டும் என்பதை உறுதிபடச்
அபிவிருத்தி தொடர்பாகவும் ஆங்
து. வலம்புரி பத்திரிகை நிறைந்த
சூரியர், சந்திரர் உள்ளவரை சிறக்க்

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**ூமி அறக்கட்டளை, இலங்கை.**

## ளிநொச்சி மாவட்ட அரச திபரின் வாழ்த்துச் செய்தி

ம்புரி பத்திரிகையானது இன்றைய
27ஆவது அகவையில் கால்பதிக்
வேளையில் வாழ்த்துக்களையும்
க்களையும் தெரிவித்துக் கொள்
தொடர்ந்தும் தமிழ் மக்களுக்குச்
பணியாற்றிட எல்லாம் வல்ல

வலம்புரி சங்குநாதம் பத்திரிகைக்
மையாளர், ஆசிரியர் குழுவினர்,
யாளர்கள் அனைவருக்கும் நல்
ள்கிறேன்.
வது "யானையைக் கட்டி தீனி
த்தந்தி பத்திரிகையின் நிறுவுநரும்
தெரிவித்துள்ளார். அந்தவகையில்,
நூற்றாண்டைக் கடந்து இன்றும்
மை உண்மையில் பாராட்டப்பட

ன் வரலாற்றில் ஒரு நீண்டகால
ாண்ட வலம்புரி பத்திரிகை பல
னகளைப் படைத்து மக்களுக்குச்
"நடுவு நிலை தவறா நன்னெறி
ம் மகுட வாசகத்துடன் கையடக்கப்
லம்புரி பத்திரிகையின் எழுத்து
ரு தனியான இடமுண்டு.
தனது நீண்டகால வரலாற்று
லாக, சமூக நலனுக்காக இன்னும்
திப் பணியாற்றிட இறையாசியை

**சு.முரளிதரன்,**
**அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.**



## யாழ்.மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

நவீன உலகின் தொடர்பாடலுக்கேற்ப ஊடகங்கள் இன்று பல பரிமாணங்களை எடுத்துள்ள போதிலும் பாரம்பரிய ஊடகமான பத்திரிகை தனக்குரிய இயல்பையும் சிறப்பையும் என்றும் இழக்கவில்லை. அந்த வகையில் வலம்புரி நாளிதழ் தமிழ் மண்ணில் கால்பதித்து 26 ஆண்டுகளை நிறைவு செய்து விழாவை கொண்டாடுகின்றதையிட்டு நான் மகிழ்வடைந்து வாழ்த்துகின்றேன்.

செய்திகளை மாத்திரம் கொடுப்பதற்கு அப்பால், தர்மத்தின் குரலாக அர்ப்பணிப்புடனும் சமூகப் பொறுப்புடனும் வலம்புரி நாளிதழ் செயலாற்றி வருகின்றமை பாராட்டுதற்குரியது. இப் பத்திரிகையின் வெற்றிக்காக உழைக்கின்ற ஆசிரியர், மற்றும் அனைத்து ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்கின்ற காலத்திலும் இப் பத்திரிகை மேலும் வளர வேண்டும் என்று ஆசித்து வாழ்த்துகின்றேன்.

**பேரருட்திரு கலாநிதி**
**யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**யாழ் ஆயர்**



## வலம்புரி ஒரு பல்கலைக்கழகம்

வலம்புரி பல விதமான தடைகளையும் தாண்டி 26 ஆவது வயதில் பேரிளம் பெண்ணாக தமிழ்ப் பிரதேசங்களில் வலம்வருவதனைக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன்.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைக்கு நீண்ட வரலாறு உண்டு. 1841 ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரிமார் "நீதி இராச்சியத்தை உயர்த்தும் பாவமோ எல்லா ஜனங்களுக்கும் இழிவாம்" என்ற மகுட வாக்கி யத்துடன் உதயதாரகை என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். இதுவே உலகின் 2 ஆவது தமிழ்ப் பத்திரிகை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பத்திரிகைகள் முக்கியமான ஐந்து பணிகளை ஆற்றுகின்றன என பழம்பெரும் பத்திரிகை ஆசிரியரான மா.பா.குருசாமி எழுதியுள்ளார்.

அவையாவன செய்தி பரப்பும் பணி , விளக்கப் பணி, விமர்சனப் பணி, கருத்தை உருவாக்கும் பணி ,காவல் பணி. இப் பணிகளை வலம்புரி திருப்திகரமாகச் செய்து வருவதனைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இங்கிலாந்தின் பிரதமராக இருந்த Gray பிரபு பத்திரிகை தான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப் பெரிய காவலாளி என்று குறிப்பிட்டுள்ளார். வலம்புரி ஒரு பல்கலைக்கழகமாகவும், காவலாளியாகவும் தனது கடமையை நிறைவேற்றி வருகின்றது. வலம்புரியின் வெற்றியைக் கண்டு நானும் பெருமகிழ்வடைகிறேன்.

வலம்புரியில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் குறிப்பாக அதன் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முன்னாள் பேராயர்**
**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**



## தர்மத்தின் குரல்

உண்மையை உறுதியாகப் பேணி, சமூக சிந்தனையைத் தூண்டும் எழுத் துக்களால் மக்களின் நம்பிக்கைக்கு உரிய ஊடகமாக 26 ஆண்டுகளாகத் தொடர்ந்து பயணிக்கும் வலம்புரிப் பத்திரிகைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

தனித்தன்மையுடன் நடுவுநிலை தவ றாது நன்நெறி காக்கும் நாளிதழாய் வலம்புரி சங்குநாதம் பத்திரிகை மூன்றாவது தசாப்தத்தை நெருங்கிக் கொண்டுள்ளது. அரசியல், விளையாட்டு, சிறுவர் பகுதி, சுகாதாரம், பொழுது போக்கு, பசுமை, சமயம் சார்ந்த கட்டுரைகள், சிறுகதை என்றனைத்தையும் உன் னுள்ளே தாங்கி வருகின்றாய். மக்கள் நலன் கருதி குறைகளை எடுத் தியம்பிட வழிசெய்கின்றாய். ஆசிரியர் தலையங்கமாக அறமுரைத்து வருகின்றாய். பத்திரிகைத் தர்மத்தின் வழி தொடர்ந்தும் நின்று மக்களுக்கு நல்வழி காட்டிடுவாய்.

மாறிவரும் காலச் சூழலில் மதிப்பீடுகளைக் காக்கும் எழுத்தும் மக்களின் குரலாக ஒலிக்கும் செய்திகளும் வலம்புரியை நம்பிக்கைக்கு உரிய ஊடகமாக உயர்த்தியுள்ளன. இந்த 26ஆம் ஆண்டு நிறைவு பல வெற்றிகளுக்கும் புதிய சிந்தனைக்கும் தடமாக அமையும் என்று வாழ்த்தி குருவருளையும் திருவருளையும் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றோம்.

**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்**
குருபீடாதிபதி, ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்தமடம்.



## உண்மையை அஞ்சாது சொல்லும் வீரம்

தமிழ் ஊடக வரலாற்றில் மறக்கமுடியாத தடம் பதித்து, உண்மையை அஞ்சாது சொல்லும் வீரமும் மக்களின் உரிமைக்காக மாறாத குரலாக ஒலித்து வரும் வலம்புரி நாளிதழ், 26 ஆண்டுகளை சிறப்புடன் நிறைவு செய்து 20.12. 2025 அன்று அகவை 27 இல் கால்பதிக்கிறது.

தமிழர் சமூகத்தின் நலன்களை முன்னிறுத்தி, அவர்களின் துயரங்களையும் தேவைகளையும் வெளிப்படையாகப் பதிவு செய்து, உரிமைப் போராட்டங்களின் உந்துசக்தியாக இருந்து வரும் வலம்புரி நீண்ட காலமாக பொறுப்பான பத்திரிகையாளித்துவத்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

சமூக நீதி, ஜனநாயகம், மனித உரிமைகள், மொழி, பண்பாடு, கல்வி, இளைஞர் முன்னேற்றம் மற்றும் வடக்கு, கிழக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட துறைகளில் துல்லியமான செய்திகளையும் ஆழமான பகுப்பாய்வுகளையும் வழங்கி வருவது வலம்புரியின் தனிச்சிறப்பு. நம்பிக்கை, நெறி, நிதானம் ஆகியவற்றைத் தழுவி தர்மத்தின் குரலாக ஒலிக்கும் இந்த ஊடகம் உண்மைச் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் எப்போதும் தளர்வின்றி நின்று வருகிறது.

அகவை 27இல் கால்பதிக்கும் இந்த சிறப்பான தருணத்தில், வலம்புரி நாளிதழ் மேலும் உயரவும் மக்களின் நம்பிக்கையை பல மடங்கு அதிகரிக்கவும் சத்தியமும் நீதியும் வெற்றிபெறும் ஊடகப் பயணத்தில் தொடர்ந்தும் முன்னுரிமை பெறவும் பணியாளர்கள் அனைவருக்கும் ஆரோக்கியம், ஆற்றல்வளம் பெருக எனது இதயம் கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மண்ணின் பெருமைமிக்க ஊடகமாக வலம்புரி நாளிதழ் இன்னும் பல தசாப்தங்கள் மக்களுக்காக சேவை செய்ய இறைவன் அருள் துணைநிற்கட்டும்.

**ஸ்ரீ சாய்முரளி**
**இந்திய துணைத் தூதுவர்**



## தமிழ் சமூகத்தின் குரலாக வெளிவரும் வலம்புரி

தனது 26 ஆவது அகவையில் தடம் பதிக்கும் வலம்புரி நாளிதழின் இந்த அரிய தருணத்தில், வலம்புரி குடும்பத்துக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவலைப் பொறுப்புடன் வழங்கும் மனப்பாங்கு, உண்மைமீதான பற்றுதல், தமிழ்ச் சமூகத்தின் குரலாக வெளிவரல், மக்களுக்கு விழிப்புணர்வு தருதல் இவையனைத்தும் வலம்புரி பத்திரிகையின் அடையாளமாக இருக்கிறது.

வலம்புரியின் ஆசிரியத் தலையங்கம் வாசகர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது. இந்தப் பயணம் ஒரு சாதனையாக மட்டும் அல்ல, பலரின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தாங்கிச் செல்லும் சேவையின் அழகிய சான்றாகும்.

வலம்புரி மாணவர்களுக்கு பயனுள்ள தொடர்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கது. ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் வாரமலரான "சங்குநாதத்தின்" ஆலடி மாநாடு, சுகமான விடியல், வியாசர் பதில்கள், ஆன்மீகம் சம்மந்தப்பட்ட கருத்துக்கள் மற்றும் வரலாறுகள் சமூகப் பெறுமதியானவை.

இனிவரும் ஆண்டுகளில் உங்கள் பத்திரிகை மேலும் புதிய உயரங்களையும் படைப்பாற்றலின் புதிய பரந்த வெளிகளையும் கொண்டு வரட்டும். சமூகத்திற்கு அர்த்தமுள்ள குரலாக நீடித்து, இன்னும் பல தலைமுறைகளைக் கடந்து உங்கள் பயணம் தொடரட்டும்.

**வைத்திய கலாநிதி த . சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர்,**
**போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.**

தர்மத்தின் குரலாய்
ஓங்கி ஒலிக்கும்
வலம்புரிக்கு 26
இன்று அகவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 26 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர் – 20.12.2025



## தனித்துவமான பத்திரிகை

இலங்கையின் ஊடக வரலாற்றில் – குறிப்பாகப் பத்திரிகைகளில் தனக்கெனத் தனித்துவமானதொரு பத்திரிகைப் பாணியைக் கொண்ட பத்திரிகையாக நான் வலம்புரியைக் காண்கின்றேன். யாழ்ப்பாணக் குடா நாட்டை மையப்படுத்தி வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் கால்நூற்றாண்டைக் கடக்கும் வலம்புரி பத்திரிகையின் சமூக வகிபாகம் மிகவும் மதிப்புக்குரியது.

யதார்த்த நிலைகளில் நின்று மக்களினதும் சமூகத்தினதும் பிரச்சினைகளை மிகவும் எளிமையாகப் பேசும் ஆசிரியர் தலையங்கம், சமூக அரசியல் ஆன்மீக கலாசார விடயங்களை தாங்கிய பத்திகளின் உள்ளடக்க அமைப்பு என வலம்புரி தனக்காக வைத்திருக்கும் தனித்துவங்கள் பலவுள. மிகவும் சிரமமான-நெருக்கடியான காலப்பகுதிகளை மிகக் கவனத்துடனும் நுட்பமாகவும் கடந்து வந்த வலம்புரி இன்று தனக்கான நீடித்த நிலையான இடத்தினை உருவாக்கியுள்ளது.

இனியிது வீழாதிருக்கும் எனும் பெரும் நம்பிக்கையுண்டு. வலம்புரி பத்திரிகையும் அது சார்ந்திருக்கும் கோட்பாடுகளும் நமது சமூகத்தில் பல தாக்கங்களை விளைவித்துள்ளன. ஒரு பத்திரிகையின் பணி வெறுமனே செய்திகளைக் கொண்டு போய்ச் சேர்ப்பது மட்டுமல்ல. செய்தியைப் பொதுமக்களிடம் சேர்ப்பிப்பதற்கு இன்று பல ஊடக வழிமுறைகள் உள்ளன. பத்திரிகைகளின் பணி அதனையும் தாண்டியது. இந்தச் செல்நெறியை நன்குணர்ந்த பத்திரிகையாக நான் வலம்புரியைக் காண்கின்றேன். அந்த நெறியில் வலம்புரி இன்னும் பல ஆண்டுகள் பயணிக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா**
**கணிதவியல் பேராசிரியர், துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**



## எங்கள் காலத்து இதழியல் முத்தாய் வலம்புரி

அகவை 27 இல் அடியெடுத்து வைக் கும் வலம்புரி நாளிதழை வாழ்த்தும் இந்தப் பொழுது பெரு மதியானது.

எங்கள் காலத்தின் குரலாக , ஆத்மா வுக்கு நெருக் கமாக வலம்புரி - சங்கு நாதம் கேட்கின்றது. கால வெளியில் நாங்கள் எதிர் கொண்ட , எதிர் கொள்ளும் நெருக்கடிகளைப் புரிந்து கொள்வதற்கும் அவைகளைக் கடந்து செல்வதற்குமான ஊடக அறிவுத்துணையாக வலம்புரியைக் கொண்டாடு கின்றோம். ஈழத்து இதழியல் வரலாற்றில் பக்குவமான அதன் ஆசிரிய தலையங்கம் முதல் ஏனைய சமூகப் பெறுமதியான பதிவுகள் வரை கவனம் பெறுகின்றன.

பண்பாட்டு உணர்திறனான , அதன் தொடர்பாடல் முறைமையின் தனித்துவம் அதன் ஆசிரிய ஆளுமை மற்றும் அதன் இயங்கு நிலைக்கான சுதந்திரத்தின் பாற்பட்டது என்றால் மிகையில்லை. சங்க கால முதலாய் எங்கள் பண்பாட்டின் விலை மதிக்க முடியாத பெருஞ் செல்வமாய், முத்தாய் கொண்டாடப்படும் 'வலம்புரி' என்ற நாமம் எங்கள் காலத்து இதழியல் முத்தாய் என்றென்றும் நின்றொளிர எல்லையிலா அன்புடன் வாழ்த்துகின்றேன் .

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



## பக்கசார்பற்ற நாளிதழ்

வலம்புரி பத்திரிகையின் இருபத்தி ஆறாவது அகவை பூர்த்தியாவது குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறேன். ஆன்மீகம்,அரசியல், கல்வி, இலக்கியம், நகைச்சுவை எனப் பல்துறை விடயங்களோடு மக்களை நாளந்தம் வளப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது பெரு மகிழ்ச்சியாக உள்ளது.

ஒரு செய்தித்தாளின் ஆசிரியர் என்பது ஒரு கப்பலை நடத்திச் செல்லும் தலைவரைப் போன்றவர். இப் பத்திரிகையின் ஆசிரியர் உயர்ந்த கொள்கைகள், சமுதாய நோக்கம், மனிதநலம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கான ஈடுபாட்டுடன் நகைச்சுவையை நயமாகப் பயன்படுத்தி ஆசிரியர் தலையங்கத்தை நாளாந்தம் தந்து கொண்டிருக்கிறார். சமுதாய சிக்கல்களை அடையாளம் கண்டு தலையங்கங்கள் மூலம் விளக்குவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

நாளிதழ் மக்கள் நலனுக்கும் கருத்துக்கும் பிரதிபலிக்க வேண்டும் என்பதே அவரது அடிப்படையான நோக்கமாக உள்ளது. உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி நாளிதழ் பலவிதமான இடையூறுகள் மற்றும் இடர்களைத்தாண்டி கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக பக்கச் சார்பின்றி நடுவுநிலையில் நின்று அதிக எண்ணிக்கையான வாசகர்களை ஈர்த்து வடமாகாணத்தில் நல்லதொரு தினசரி பத்திரிகையாக போற்றப்படுகிறது. இப் பத்திரிகை மேன்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன்.

**கலாநிதி.க.தவலிங்கம்**
**ஓய்வு நிலை நிலஅளவையாளர் நாயகம்.**
**தவிசாளர். எல்லை நிர்ணய ஆணைக்குழு.**



## பிரதேச அபிவிருத்தியில் அதீத கருசனை கொண்ட நாளிதழ்

பிராந்திய ஊடக மையமான யாழ்ப் பாணத்தில் இருந்து வெளிவருகின்ற வலம்புரி பத்திரிகை தகவல் நாடி நிற்கும் மக்களின் அச்சு ஊடகத் தேவைகளைப் பயன்தரும் முறையில் பூர்த்தி செய்து மக்களிடையே நிலை பேறான இடத்தைப் பெற்று வருகின்றது.

ஜனநாயகம், நல்லாட்சி, மக்களின் உரிமைகள், சமூக நீதி, சமுதாய ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு, சமூக விழிப்புணர்வு பற்றி அறிவித்தல் அறிவுறுத்தல் ஆகியவற்றை முன்னெடுப்பதில் வலம்புரியின் பங்கும் பணியும் காத்திரமானவை. பிரதேச அபிவிருத்தியை முன்னெடுப்பதில் மிகுந்த ஈடுபாடு காட்டிவரும் இப்பத்திரிகை இப்பிரதேசத்தில் இடம்பெறும் பொது மற்றும் தனியார் நிகழ்வுகளை மாண் இடைநுண் மட்டங்களில் அறியத் தருவதால் சமூக அசைவாக்கம் இலகுபடுத்தப்படுகிறது.

வலம்புரியின் ஆசிரிய தலையங்கங்கள் வாசகர்களிடையே பேசு பொருளாக வுள்ளன. பல்துறைசார்ந்த சமகால விடயங்கள் குறித்து கருத்துருவாக்கம், கருத்தேற்றம் செய்வதுடன் வேண்டிய இடங்களில் பாராட்டையும், கண்ட னத்தையும், ஆலோசனை களையும் தெரி விப்பது குறிப்பிடத்தக்கது. வலம்புரி வளரும் புதிய தகவல் தொழில் நுட்பங்களை உள்வாங்கி, விடயங்களை அதிகரித்து காலத்துக்கு ஏற்ப மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**



## விளம்பரத்துக்காக நேர்மையை விலைகொடுக்காத பத்திரிகை

வாசிப்பு என்பது வெறும் எழுத்துக்களை மட்டும் கண்களால் கடத்தும் செயல் அல்ல, அது சிந்தனை, அனுபவம், தகவல்கள், வாழ்வியல், மாற்றங்கள், வியப்புகள், கண்டுபிடிப்புக்கள், கதைகள், காவியங்கள், செய்திகள் என பலவகை அறிவாற்றலை எம்முள் கடத்தும் ஒரு செயல்.

வாசிப்பு பழக்கம் என் சிறுவயது முதலே என்னுடன் கூட வளர்ந்த ஒரு இயல்பான, எனக்கு மிகவும் பிடித்த ஒரு விடயம். அதிலும் குறிப்பாக பத்திரிகைகள் வாசிப்பு என்பது எனக்கு மிகுந்த ஆர்வமான விடயம் என்பதை காட்டிலும் தினசரி கட்டாயம் நான் தொடரும் ஒரு வழமையான செயல். தினமும் காலையில் பல பத்திரிகைகள் வாசிப்பது என் வழக்கம். அதிலும் குறிப்பாக வலம்புரி பத்திரிகையை விரும்பி வாசிப்பது உண்டு. ஆசிரியர் தலையங்கம் என்னும் கட்டுரை என்னுடைய மிக பிடித்தமான ஒன்று.

உங்கள் பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரையில் ஒரு வாசகராக நானும் தொடர்கின்றேன். குறிப்பாக நடுநிலை தளராத செய்திகள். ஆரம்பகால தொடக்கத்தில் இருந்து இன்று வரை நடுநிலை தவறாத உங்கள் தர்ம வழிப் பயணம் பாராட்டிக் கொள்ள வேண்டிய ஒன்று. விளம்பரங்களின் மூலமும் பொதுமக்களுக்கு தேவையான தகவல்கள் கிடைக்கின்றன. இன்று வரையிலும் விளம்பரங்களை அதிகரிக்க நீங்கள் உங்கள் நேர்மையை விலை கொடுக்காமல் இருப்பதே என்னை வலம்புரியை விரும்பி வாசிக்க வைத்த முக்கிய விடயம். 26 ஆவது வருடத்தை நிறைவு செய்யும் இந்தக் கட்டத்தில் உங்கள் பத்திரிகை யின் நேர்மை தவறாத செய்திகளுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் பணி மென மேலும் தொடர தர்மத்தின் குரலாக என்றும் நேர்மையுடன் தொடர மனதார பிரார்த் திக்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**



## அறிவுலகத்தை அரவணைக்கும் நாளிதழ்

வலம்புரிப் பத்திரிகையை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணத்திற்கு நீண்டதொரு பத்திரிகைப் பாரம்பரியம் உண்டு. தமிழிலும் ஆங்கிலத்திலும் வார, மாத, காலாண்டு இதழ்களாகப் பல இங்கு வெளிவந்தன. 19 ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ இருபத்தைந்து இதழ்கள் வெளிவந்தன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். 1880 ஆம் ஆண்டு சைவ உதயபானு என்னும் பத்திரிகை யாழ்ப்பாணத்திலும் மதுரையிலும் இருந்து ஏககாலத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. நவீன வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில் ஈழத்தில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் ஏககாலத்தில் பத்திரிகை வெளியிட்ட பெருமை ஊரெழு சரவணமுத்துப்பிள்ளைக்கு உரியது. இவர் நாவலரின் ஞானபரம்பரையில் வந்தவர்.

இந்தப்பின்னணியிலே தான் வலம்புரிப் பத்திரிகையை நான் நோக்குகிறேன். இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளிற் பல பழைமையை நினைவூட்டுகின்றன. வலம்புரிக்கு ஒரு தனித்துவம் உண்டு என்பது எனது மனப்பதிவு. வீட்டிலுள்ள அனைவரும் ஏதோ ஒரு வகையில் தம்தமக்குரிய செய்திகளைத் தேடிப்படித்து பயன்பெறுகின்ற தன்மை வலம்புரிக்கு உண்டு. நான் சிறப்பாக வலம்புரியின் ஆசிரிய தலையங்கத்தைப் படிப்பேன். ஆடி மாநாடு, சிறுவர்களுக்கான பகுதி, இன்று ஒரு தகவல் முதலானவைக்கு என ஒரு வாசகர் குழாம் இருக்கிறது. அதுபோலலே பழைய நாவல் வெளியீடு, முகப்புத்தகத்தில் பிடித்தது, பழைய சினிமாப் பாடல் முதலியவற்றிற்கு ஒரு வாசகர் குழு இருக்கிறது. திரு.தவலிங்கம் போன்ற வர்களின் கட்டுரைக்கென மாணவர்களும் மூத்தவர்களும் இருக்கிறார்கள். இன்றைய சந்தை நிலைவரம் எல்லோராலும் பார்க்கப்படுகின்றது. உலகச் செய்திகளை உற்றுநோக்கி உரையாடுபவர்களும் உளர். சுருக்கமாகச் சொல்வதானால் வலம்புரி அறிவுலகத்தை அரவணைக்கும் ஒரு பல்பொருள் அங்காடி போன்றது. 'அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு' மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் வலம்புரியை வாழ்த்துகிறேன். இன்றைய மக்களுக்கு எது தேவையோ அது வலம்புரியில் இருக்கும். என்றும் மாற இளமையுடன் வாழ வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.ச.பே நாகரத்தினம் சகக நிறுவனம்

E.S.P & COMPANY

# E.S.P Nagaratnam & Co

**Dealers & Distributors in Bicycles, Baby Cycles & Bicycle Spare Parts**

நடுநிலை தவறா நலன்மிகு நாளிதழே!
நின்பணி தொடரட்டும்...



**அனைத்து வகையான துவிச்சக்கர வண்டிகள்**
அதற்கான உதிரிப்பாகங்கள் என்பவற்றை வடமாகாணத்தில் எங்குமில்லாத விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (C-4622)

இல.52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3096

# voyzant®

TRUSTED FOR TRAVEL

கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்"

## எமது சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா

**இந்திய திருத்தல தரிசனம்**

| | | |
|---|---|---|
| ஆறுபடை வீடு | சிதம்பரம் | திருவண்ணாமலை |
| திருவானைக்கா | திருப்பதி | ஸ்ரீரங்கம் |
| மதுரை மீனாட்சி | காஞ்சி காமாட்சி | திருநாகேஸ்வரம் |
| வைத்தீஸ்வரன் | திருவெண்ணெய் நல்லூர் | இராமர் கோவில் |
| இராமேஸ்வரம் | மேல்மருவத்தூர் | சங்கரப்பாணி |
| திருக்கடவூர் | அன்னை வேளாங்கண்ணி | பூண்டி மாதா |

**உட்பட 35இற்கு மேற்பட்ட கோவில்கள்**
189,000/= (ஒரு நபரிற்கு) (10 பேர் கொண்ட குழு)

விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து, தங்குமிடம்
9 இரவுகள் / 10 நாட்கள்

**புறப்படும் திகதிகள்** 29.01.2026, 26.02.2026

| மலேசியா | கேரளா | சிங்கப்பூர் |
|---|---|---|
| விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து, தங்குமிடம் சுற்றுலா (2 நபர்) 5 இரவுகள் / 6 நாட்கள் 198,000/= (1 நபரிற்கு) | விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து, தங்குமிடம் சுற்றுலா (2 நபர்) 4 இரவுகள் / 5 நாட்கள் 183,000/= (1 நபரிற்கு) | இருவழி பயணச் சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து, தங்குமிடம் சுற்றுலா (2 நபர்) 4 இரவுகள் / 5 நாட்கள் 230,000/= (1 நபரிற்கு) |

(நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலதிக விபரங்களுக்கு: **Voyzant(Pvt)Ltd**
இல.617 & 619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
[OLR Churchஇற்கு அருகில்]
077 284 9535, 021 222 6866, 077 026 9999 (C-4625)

**எமது கிளைகள்**
மருதானை, வெள்ளவத்தை, குருநாகல்.

**சர்வதேச கிளைகள்**
கனடா, இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன்

# THE CHOLA SAMRAAJ Restaurant

CHOLA

# தி சோழ சாம்ராஜ் ரெஸ்ரோரண்ட்

தி சோழ சாம்ராஜத்தில் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் **விலைக்கழிவு**



**சுவை உலகில் சோழ சாம்ராஜ்ஜியம் தி சோழ சாம்ராஜ் உணவகம்**

**Offer Valid Until 25.12.2025**

1 சிக்கன் பிரியாணி வாங்கினால் பெப்சி சோடா (250ml) இலவசம் (FREE)

2 சிக்கன் பிரியாணி வாங்கினால் சிக்கன் 65 இலவசம் (FREE)

இல.83, இராமநாதன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
021 221 7944 07[illegible]

# நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு 10% DISCOUNT

# லைடன் புடவை நிலையம் – யாழ்ப்பாணம்

எதிர்வரும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் 10% விசேட விலைக்கழிவு மற்றும் விசேட விலைத் தள்ளுபடிகளில் உங்களுக்கான ஆடைகளை பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

Merry Christmas AND HAPPY NEW YEAR

SUPER SALE



- 1 சேட், 1 ஜீன்ஸ் (1 பெனியன் Or 1 சாறம் இலவசம்) - 3500/=
- 3 சாறி (1 சாறி இலவசம்) - 3500/=
- 3 சாறம் (Saram) - 985/=
- 3 சட்டை (Frock) - 2500/=
- 3 சேலை (Saree) - 1000/=
- 1 குளிர் மேலங்கி (Jacket) - 750/=
- 1 சேட் – அரைக்கை (Shirt - S/S) - 1000/=
- 1 சேட் – முழுக்கை (Shirt - L/S) - 1250/=
- 5 ரீசேட் (T.shirt) - 1000/=
- 3 சொக்ஸ் - 300/=
- சிறிய சுவிட்டர் - 750/=
- பெரிய சுவிட்டர் - 1000/=
- 3 பிரா (Bra) - 1000/=
- 1 நைட்டி (Nighty) - 500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
Until Stock last...

**10% விலைக்கழிவு** 31.12.2025 வரை மட்டுமே!

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு நாளை 21.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(C-4624)
**Leyden Textile Center 10%**
418, Hospital Road, Jaffna. 021 222 2381

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி சங்குநாதம் மேலும் சிறப்பம்சங்களுடன்
மக்கள் மனதில் என்றும் ஒலிக்கட்டும்

ஸ்ரீ முருகன்
SRI MURUGAN
Communication Agency post office



உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக பாதுகாப்பான சேவைகள். இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.



WESTERN UNION MONEY TRANSFER | DHL | Ria | DEVELOPMENT LOTTERY Enriching Your Life | aramex | MMBL Money Master | Dialog | MoneyGram

Email: Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com
No.303, K.K.S Road, Jaffna, Srilanka
+ 94 21 222 2670 / 5392
+ 94 21 222 3214 (C-4623)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
A/L தொழில் நுட்பப் பிரிவு
TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
- விவசாய விஞ்ஞானம்
  தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
  புவியியல்
  கணிதம் (7)



A/L - 2026 / 2027 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
077 017 5346 (C-4626)

# சிறப்பான ஆசிரியர் தலையங்கத்தால் மக்களின் மனங்களை வென்ற வலம்புரி

## அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை புகழாரம்

வலம்புரிப் பத்திரிகையின் முதல் ஆண்டில் இருந்து இன்றுவரை அதனோடு மிக நெருங்கிப் பயணிப்பதனால் அதன் பயணப் பாதையின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியையும் நான் நன்கு அறிந்துள்ளேன்.

அந்த வகையில் வலம்புரியின் 26ஆவது ஆண்டு நிறைவில் அப் பத்திரிகை எந்தத் தங்கு தடையுமின்றி ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி தொடர்ந்தும் பரந்து வளர இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இந்த மகத்தான சாதனையின் மைந்தர்கள் வலம்புரிப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர்கள் திரு. க. திருமாலழகன், திரு. ந. விஜயசுந்தரம் மற்றும் உதவி ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் - ஊடகப் பணியாளர்கள் என்றும் வாழ்த்திப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

வலம்புரிப் பத்திரிகை பற்றி பல இடங்களிலும் பல தடவைகளிலும் நான் திரும்பத் திரும்பச் சொல்லியும் எழுதியும் வந்த விடயங்களை அப்பத்திரிகையின் 26 ஆவது ஆண்டில் திரும்பச் சொல்ல விரும்புகிறேன்.

வலம்புரிப் பத்திரிகை வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற தனது உறுதியான- அதேவேளை யாருக்காகவும் மாற்றப்பட முடியாத நிலைப்பாட்டாலும் - செய்திகளை அம்பு எய்வது போல் அச்செனத் துல்லியமாக- நடுநிலையாக- பக்கம் சாராமல் தரும் பத்திரிகைக் கோட்பாட்டாலும் பத்திரிகை உலக ஒழுக்க நெறியை பிரமாணமாகப் பின்பற்றும் தன்மையாலும் எந்த ஒரு சட்டச் சிக்கலிலும் சிக்கிக் கொள்ளாது யாருக்காகவும் தன் கொள்கைகளையோ கோட்பாடுகளையோ விட்டுக் கொடுக்காது மனச்சான்றின்படியும் நீதியின் படியும் பணியாற்றுகின்ற பண்பாலும், அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் காலத்தின் நாடி பிடித்துப் பார்த்து மக்களின் தேவை ஒட்டிய ஆசிரிய தலையங்கங்களை எழுதி கருத்துருவாக்கம் செய்யும் சிறப்பான பணியாலும் வலம்புரிப் பத்திரிகை வட பகுதித் தமிழ் மக்கள் மத்தியில் தனக்கெனத் தனியான- சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பது பெருமையுடன் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

உலகப் பிரபலம் பெற்ற அறிஞர் பேணாட் சோ அவர்கள், யாரும் ஆசிரியர் தலையங்கங்களைப் படிப்பதற்காகப் பத்திரிகைகளை வாங்குவதில்லை என்றார்.

அக்கூற்றை சாவாலுக்குட்படுத்தி ஆசிரியர் தலையங்கங்களைப் படிப்பதற்காகவே பலர் வலம்புரிப் பத்திரிகையை வாங்குகிறார்கள் என்ற புதிய நிலைப்பாட்டைத் தோற்றுவித்தவர் வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் அவர்கள்.



தனது பல்வடிவ ஆசிரியர் தலையங்கங்களால் பல சமகால விடயங்களைத் துல்லியமாக அலசி ஆராய்ந்து பலரின் கவனத்தை கவர்ந்தும், வசனங்களுக்கிடையில் பல விடயங்களைப் புனைந்தும் பாடம் புகட்டி ஊடகத்துறையின் கருத்துருவாக்கப் பணிக்கு ஆசிரியர் தலையங்கத்தை முழுமையாகப் பயன்படுத்துகின்றமை அவரின் சிறப்பாகும். அவரின் இந்த அற்புத ஆற்றலுக்காக அவர் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்.

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற தனது மகுட வாக்கை வலம்புரிப் பத்திரிகை என்றும் எல்லோரிற்கும் எப்போதும் சரியாகவும் சமமாகவும் பிரமாணிக்கத்துடன் நடுநிலை தவறாது தொடர்ந்தும் பாதுகாத்து வர விரும்பி ஆசிக்கிறேன்.

**கலாநிதி**
**ரூபன் மரியாம்பிள்ளை**
ஊடக வருகை விரிவுரையாளர்
(யாழ்.பல்கலைக் கழகம்,
வவுனியா பல்கலைக்கழகம்)
இயக்குநர், பிசப் சவுந்தரம்
மீடியா சென்ரர்



### நீதியின் குரலாக தொடர்ந்து ஒலிக்கட்டும்

யாழ்.குடாநாட்டின் பல்வேறு இக்கட்டான யுத்த சூழ்நிலைகளிலும் பல அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பனவற்றை எதிர்கொண்டு 27 ஆவது அகவையில் தடம்பதிக்கும் வலம்புரி நாளிதழின் பணிமகத்தானது.

1999 டிசெம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை "நடுநிலை தவறா நன்னெறி காக்கும்" என்ற மகுட வாசகத்துடன் அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி மேம்பாடு, விளையாட்டு செய்திகள், சினிமா என பயனுள்ள விடயங்கள் வெளிவருவது சிறப்புக்குரியது.

தமிழ் மக்களின் நீதியின் குரலாக வலம்புரி நாதம் தொடர்ந்து ஒலிக்க வேண்டும் என்று வாழ்த்தி கோடி மாரித்தாயவள் பாதம் பணிந்து போற்றி அடியேனின் நல்ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறி அமைகின்றேன்.

"பிரதிஷ்டா சிரோண்மணி"
**சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P**
**பிரதம குரு. வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

# இடையறாப் பணியினால் இன்னமும் அகவை கொள்வாய்...!



வலம்புரிக்கு வணக்கம், வாழ்க நீ பல்லாண்டு!
தடம் பதிக்கும் செய்தியுடன் நீலம்புலர எழுந்தே
நலமளிக்கும் நற்பணியை நாளும் புரிதலுடன்
கடமையென உலா வரும் வலம்புரியே வாழ்க!
தலையங்கம் அறிவரங்கம் மீதமோ கருத்தரங்கம்
தமிழெங்கும் சுழல்கின்ற தகவலின் சுரங்கமாய்
நிலையான வாசகரின் நீங்காத ஆதரவால்
மலைபோல நிமிர்ந்தாய் மங்காது நிலவிடுக!
அகவை உயரப்பணி ஆல்போலப் பரவிடவே
புதுமை இதழாகப் புவனத்தில் வளர்ந்து
இருபத்து ஆறாண்டு இடையறாச் சேவையுடன்
இருபத் தேழுக்குள் புகுந்தனை சாதனையே!
தளராத உண்மைகளைத் தாங்கிடும் ஏடாகி
தவறாது மக்களுக்குச் சிந்தனைத் தெளிவூட்டும்
'வலம்புரிக்கு' இணையாக வேறேதும் இல்லையெனும்
பலம்பெற்று வளரவே வாழ்த்துகிறேன் வாழிவாழி!!

**நீர்வை - இரா. தில்லைராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு, சிக்குன்குனியா



## நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்!

ஒவ்வொரு ஆண்டும் உலகில் மில்லியன் கணக்கானவர்கள் பாதிக்கப்படுகின்றனர்!

நோய் காவிகளான ஏடிஸ் *(Aedes)* நுளம்புகள் நன்னீரில் மட்டுமல்லாது, தற்போது உவர்நீரிலும் பெருக ஆரம்பித்துள்ளன!!

**விழிப்புடன் இருங்கள்!!!**

டெங்கு, சிக்குன்குனியா நோய்கள் வைரஸ் காரணமாக ஏற்படுகின்றன. இவை *Aedes aegypti* மற்றும் *Aedes albopictus* நுளம்புகளினால் பரவுகிறது

இது கடற்கரை கிராமங்கள் மற்றும் மீனவர் பகுதிகளில் டெங்கு அபாயத்தை அதிகரிக்கிறது!

### நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள்?

- தண்ணீர் தொட்டிகள், டயர்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள்
- காலியாக இருக்கும் குடங்கள், மலர் தொட்டிகள்
- படகுகளில் தேங்கிய உவர்நீர், உவர்நீர் கிணறுகள்
- குட்டைகளில் தேங்கிய மழைநீர்



### நோய்க்கான அறிகுறிகள்

**டெங்கு**
காய்ச்சல், தலைவலி, கண்கள் பின்னால் வலி, தசை/சதை வலி, தோல் புண்கள், வீக்கம், வாந்தி, பசியின்மை.
நோய் கடுமையாக மாறினால் இரத்தச்சிதைவு, உள்அவய பாதிப்பு

**சிக்குன்குனியா**
அதிக காய்ச்சல்
மிக கடுமையான மூட்டு/எலும்பு வலி (மாதங்கள் நீடிக்கலாம்)
சோர்வு, தசை வலி, சரும புண்




*Aedes* நுளம்பு பொதுவாக நன்னீரில் வளரும். சமீப காலங்களில்
உவர்நீர் *(Brackish water)*
கடற்கரை பகுதிகளில் உள்ள படகுகளின் அடிப்பகுதியில் தேங்கும் நீர்
கடற்கரை உவர்நீர் கிணறுகள்
போன்றவற்றிலும் பெருகுவது பதிவு செய்யப்பட்டுள்ளது!!

### நீங்கள் செய்ய வேண்டியவை?

- வாரத்திற்கு ஒருமுறை அனைத்து நீர் தொட்டிகளையும் சுத்தம் செய்தல்.
- மூடியில்லாத சேமிப்பு நீர் பாத்திரங்களில் மூடி பயன்படுத்தல்.
- உவர்நீர் கிணறுகளை மூடி பாதுகாப்பதில் கவனம் செலுத்துதல்.
- கடற்கரை படகுகளில் தேங்கும் நீரை தினசரி வெளியேற்றல்.
- நீண்ட கை உடை, லோஷன், நுளம்பு விரட்டி, நுளம்பு வலைகளை பயன்படுத்தல்.

**அறிகுறிகள் இருந்தால் சுயமருந்து எடுக்காதீர்!**
**உடனே மருத்துவமனைக்கு செல்லவும்!**

நமது விழிப்புணர்ச்சியே டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய மிகப் பெரிய ஆயுதம்!!

தயாரிப்பு: பூச்சியியல் ஆராய்ச்சி மையம்
(Center for Research in Entomology)
விலங்கியல் துறை யாழ். பல்கலைக்கழகம். 2025

# இடர் மிகுந்த காலங்களில் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்

## மேயர்கள், தவிசாளர்களுக்கு செயலமர்வில் ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் உயிருக்குப் போராடும் இடர் வேளையில் எரிபொருள் மற்றும் நிதியைக் காரணம் காட்டி பணிகளைத் தாமதப்படுத்துவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள் மற்றும் தவிசாளர்களுக்கான விசேட செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை கைதடியிலுள்ள உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,பேரிடர் காலங்களில் மக்களின் துயர்துடைக்க இரவு பகலாக உழைத்த பல தவிசாளர்களை நான் பாராட்டுகின்ற அதேவேளை, சில கசப்பான உண்மைகளையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. பேரிடர் வேளையில் சில சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் என்னிடம் கவலையோடு முறையிட்டனர். மக்கள் உயிருக்குப் போராடும்போது, 'எரிபொருள் தந்தால்தான் இயந்திரங்களை இயக்குவோம்', 'பணம் ஒதுக்கினால்தான் வேலை செய்வோம்' என் நிபந்தனை விதித்துக்கொண்டு நிர்வாகச் சிக்கல்களைக் காரணம் காட்டியதை மன்னிக்க முடியாது. மாகாண நிர்வாகம் நிதியை வழங்கத் தயாராக இருக்கும்போதும், பிரதேச செயலகங்களில் நிதியைக் கோரி காலத்தை வீணடித்தமை தவறான முன்னுதாரணமாகும்.

சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுமாறு அதிகாரிகளை வற்புறுத்துவதும், அவர்கள் மறுக்கும் பட்சத்தில் சபையில் தீர்மானம் நிறைவேற்றி அதனைச் செய்ய முற்படுவதும் தவறான நடைமுறையாகும். சட்டத்துக்கு முரணான ஒரு விடயத்தை, சபையில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் சட்டபூர்வமாக்கிவிட முடியாது என்பதைத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதிகாரிகள் சட்டத்தை சுட்டிக்காட்டுவது உங்களைக் கட்டுப்படுத்த அல்ல, மாறாக உங்களைச் சரியான பாதையில் வழிப்படுத்தவே என்பதை உணர வேண்டும்.

சில சபைகளில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தகவல்கள் தவிசாளரின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இது அச்சட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே சிதைப்பதாகும். நாம் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும் பட்சத்தில் தகவல்களை வழங்கப் பயப்படத் தேவையில்லை. இவ்வாறான சட்ட முரணான தீர்மானங்களை அனுமதிக்க முடியாது என்றும் ஆளுநர் சுட்டிக் காட்டினார். (வி)

பல ஆயிரம்
கடந்த பதிவுகள்
ஆயிரத்திற்கு மேற்பட்ட திருமணங்களைப் பொருத்திய சாதனை...
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=
(ஞாயிற்றுக்கிழமை விடுமுறை)



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1005, 076 097 3120
Email : kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் மீண்டும் வெடித்தது போராட்டம்!

(டாக்கா) ------------------------

**“இன்கிலாப் மஞ்ச்” என்ற செய்தித் தொடர்பாளர் ஷெரிப் ஒஸ்மான் ஹாடி சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததைத் தொடர்ந்து பங்களாதேஷில் மீண்டும் போராட்டங்கள் வெடித்தன.**



அடையாளம் தெரியாத தாக்குதல்காரர்களால் தலையில் சுடப்பட்டதில் படுகாயமடைந்த ஹாடி, சிங்கப்பூரில் உள்ள எவர் கேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு காலமானார்.

தலையில் ஏற்பட்ட பலத்த காயங்கள் காரணமாக, டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு முதலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அவரது மரணச் செய்தி வெளியான உடனேயே, அவரது ஆதரவாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் டாக்காவின் ஷாபாக்கில் கூடி, நீதிகோரி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

டாக்கா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த போராட்டங்கள் உட்பட, பங்களாதேஷில் உள்ள பல மாணவர் அமைப்புகளும் தலைநகர் முழுவதும் வீதிகளில் இறங்கின.

போராட்டத்தின்போது ஆர்வலர்கள், உள்துறை ஆலோசகரும் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரலுமான ஜஹாங்கிர் ஆலம் சவுத்ரியின் உருவ பொம்மையை எரித்தனர்.

ஹாடி மீதான தாக்குதலுக்கு காரணமானவர்களை கைது செய்யத் தவறியதற்காக அவர் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தனர்.

இதனால், டாக்காவின் சில பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை நேற்று முன்தினம் இரவு வெகுநேரம் வரை மிகவும் நிலையற்றதாகவே இருந்தது.

ஜுலை எழுச்சி மற்றும் அவாமி லீக்கின் மீது அரசியலமைப்பு தடை கோரும் பிரசாரத்தின் போது ஷெரீப் ஒஸ்மான் ஹாடி முக்கியத்துவம் பெற்றார்.

இந்திய சார்பு அரசியலின் கடுமையான எதிர்ப்பாளராக தன்னைக் காட்டிக் கொண்ட அவர், பழைய பாணி அரசியலுக்குத் திரும்புவது விரைவில் சரிந்துவிடும் என்று எச்சரித்தார். (நி-8)

# மெஸ்ஸியின் இந்திய வருகை; திகைக்க வைக்கும் செலவு விபரங்கள்

(டில்லி)

உலகப் புகழ்பெற்ற கால்பந்து நட்சத்திரம் லயோனல் மெஸ்ஸி அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட 'GOAT' சுற்றுப்பயணம், அதன் பிரம்மாண்டமான செலவுகள் மற்றும் கட்டணங்கள் காரணமாக சமூக வலைத்தளங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.



மெஸ்ஸியின் இந்த குறுகிய கால இந்திய விஜயத்திற்காக அவருக்கு வழங்கப்பட்ட ஊதியம் குறித்த உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இருப்பினும், இந்திய ஊடகங்களின்படி, இந்த விளம்பரப் பயணத்திற்காக அவருக்கு 100 முதல் 150 கோடி இந்திய ரூபாய் (சுமார் 12 முதல் 18 மில்லியன் டொலர்) வரை வழங்கப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்தச் சுற்றுப்பயணத்தின் போது மெஸ்ஸியை நேரில் சந்திக்கவும் அவருடன் புகைப்படம் எடுக்கவும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

மெஸ்ஸியுடன் ஒரு புகைப்படம் எடுக்கவும், அவருடன் சிறிது நேரம் உரையாடவும் ஒரு ரசிகரிடமிருந்து சுமார் 10 இலட்சம் இந்திய ரூபாய் (சுமார் 12,000 டொலர்) வசூலிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சுற்றுப்பயணத்தின் மூலம் கிடைத்த வருமானத்தில் எவ்வளவு தொகை மெஸ்ஸிக்கு நேரடியாகச் சென்றது அல்லது பாதுகாப்பு மற்றும் இதர ஏற்பாடுகளுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது என்பது குறித்த விரிவான நிதி அறிக்கையை அமைப்பாளர்கள் இதுவரை வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு ஓமனின் மிக உயரிய விருது



(மஸ்கட்)

மேற்காசிய நாடான ஓமன் சென்றுள்ள பிரதமர் மோடிக்கு, அந்த நாட்டின் மிக உயரிய, “ஆர்டர் ஆப் ஓமன்” விருதை மன்னர் சுல்தான் ஹைதம் பின் தரிக் வழங்கி கௌரவித்துள்ளார்.

மேற்காசிய நாடான ஜோர்டான், கிழக்கு ஆபிரிக்க நாடான எத்தியோப்பியா, மற்றொரு மேற்காசிய நாடான ஓமன் ஆகிய மூன்று நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார்.

எத்தியோப்பியா சென்ற அவருக்கு, அந்நாட்டின் மிக உயரிய விருதான, “தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா” வழங்கப்பட்டது.

இதையடுத்து ஓமன் சென்ற பிரதமர் மோடிக்கு, அங்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் தலைநகர் மஸ்கட்டில் நடந்த விழாவில் அந் நாட் டின் மிக உயரிய விருதான ஆர்டர் ஆப் ஓமன், மன்னர் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கால் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

இது, பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட 29ஆவது சர்வதேச விருது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகிலா மகேந்திரனுக்கு பவளவிழா



ஈழத்துத் தமிழ்க் கலை, இலக்கியப் படைப்புலகில் தனக்கெனத் தனி முத்திரை பதித்து, சமூகப் பெறுமானம் மிக்க தன் பணிகளை இற்றைவரை முனைப்புடன் முன்னெடுத்து வரும் கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் பவளவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப் பாணம் இல. 37 இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆசிரியத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், அதிபராக பிரதிக் கல்விப் பணிப் பாளராகப் பணியாற்றிய தோடு ஆக்க இலக்கிய கர்த்தாவாக, நாடக வல்லுநராக, உளவளச் சிகிச் சையாளராக, சமூக செயற் பாட்டாளராகவும் இயங்கித், தன் நுண்மாண் நுழைபுலத்தைப் பன்முகத் தளங்களினூடு தமிழுலகிற்கு அளித்துவருகிறார். சிறுகதை, நாவல், நாடகம், உளவியல்சார் கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது இலக்கியப் பணிகள், அரச விருதுகள் உட்பட பல்வேறு விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, நாதசங்கமம், ஆசியுரை, வாழ்த்துரைகள், பவள விழா நூல் வெளியீடு, போலச் செய்தல் (நடிப்பு அளிக்கை), பட்டிமண்டபம், நாடகம், நன்றியுரை என்பன இடம்பெறவுள் ளன. (8)

# யாழ்.இந்தியதுணைத்தூதுவர் சாய்முரளி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் சந்திப்பு




(சாவகச்சேரி)

யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய் முரளிக்கும்- சாவகச் சேரி நகராட்சி மன்றத்தினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த புதன்கிழமை யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ், உபதவிசாளர் ஞா.கிஷோர், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற செயலாளர் செ.நிசான் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நகராட்சி மன்றின் செயற்பாடுகள் மற்றும் பல்வேறு தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நகராட்சி மன்றிற்கு இந்திய உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இந்தியத் துணைத் தூதரகத்தினால் இந்திய கலைஞர்களைக் கொண்டு யாழில் கலை கலாசார நிகழ்வுகளை நடத்துகின்ற வேளை நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்திலும் இந்திய கலைஞர்களைக் கொண்டு நிகழ்வுகளை நடத்துதல், நகராட்சி மன்ற மைதான புனரமைப்பு , சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கும் இந்தியாவில் உள்ள நகராட்சி ஒன்றுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி ஆலோசனை மற்றும் வளப்பரிமாற்றங்களில் ஈடுபடுதல் மற்றும் உறுப்பினர்கள், ஊழியர்களுக்கு பயிற்சிகள், நேரடி களத்தரிசிப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை நகராட்சி மன்றத்தினர் முன்வைத்தனர்.

குறித்த விடயங்கள் தொடர்பில் கரிசனையோடு கலந்துரையாடிய துணைத்தூதுவர், நகராட்சி மன்றத்தினரோடும் தமிழ் மக்களின் நலனிலும் ஆதீத அக்கறையுடன் தொடர்ந்தும் பணியாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

இந்திய துணைத் தூதுவருடனான சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாகவும் சிநேகபூர்வமாகவும் இருந்தது என நகராட்சி மன்றத்தினர் தெரிவித்தனர். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800 | 800 | 800 | 800 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 | — |
| பச்சைமிளகாய் | 1600 | 1400 | 1200 | 1200 | 1300 |
| தக்காளி | 600 | 600 | 600 | 700 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 | 200 |
| கோவா | 350 | 250 | 300 | 400 | 300 |
| கரட் | 400 | 330 | 300 | 400 | 300 |
| பூசணி | 140 | 140. | 100 | 120 | 100 |
| புடோல் | 350 | 450 | 300 | 400 | — |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 200 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 400 | 240 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 250 | 300 | 220 |
| பாகற்காய் | 1800 | 1700 | 1500 | 2000 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 300 | 300 | 600 | 300 |
| கருணைக்கிழங்கு | 350 | 250 | 300 | 400 | — |
| பயற்றங்காய் | 800 | 600 | 600 | 1000 | 600-700 |
| லீக்ஸ் | 400 | 350 | 250 | 400 | 300 |
| பீற்றூட் | 400 | 500 | 500 | 600 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 1200 | 1400 | 1200 |
| முருங்கைக்காய் | — | — | 2000 | — | — |
| போஞ்சி | 700 | 700 | 1000 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 800 | 650 | 500 | 700 | — |
| கீரை - 1 பிடி | 180 | 120-180 | 200 | 250 | — |
| தேசிக்காய் | 600 | 800 | 400 | 400 | — |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 120-180 | — |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 600 | — |
| வெங்காயப்பூ | 600 | 900 | 600 | — | — |
| முள்ளங்கி | 300 | 250 | 200 | 400 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 200 | 80 | — |
| வல்லாரை | 80 | 70 | 100 | 150 | — |
| ஈரப்பலா | 100 | 100-150 | 100 | 250 | — |

# இராசிபலன்

20.12.2025
மார்கழி 05 , சனிக்கிழமை
அமாவாசை காலை 7.46 மணி வரை

மூலம் பின்னிரவு 2.05 மணிவரை
சுபநேரம் 3.24-4.54 மணிவரை
இராகுகாலம் 9.24-10.54 மணிவரை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகிணி.

வளவன்

**மேஷம்** — வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கடகம்** — உறவினர் வருகையால் உற்சாகம் கூடும், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவமொன்று இடம்பெறலாம்.

**துலாம்** — சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** — எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**ரிஷபம்** — குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** — பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** — செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** — ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** — சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடப்பர், பணிச்சுமை குறையும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** — சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

தவறான பாதையில் வெகுதூரம் வந்தாலும் திரும்பச் செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு விசாரணை பெப்ரவரியில்



(கொழும்பு)

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்த ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதி அபர்ணா சுவது ருகொட முன்னிலையில் விசார ணைக்கு வந்தது.

இதன்போது, வழக்கு தொடர்பான சில ஆவணங்களை சட்டமா அதிபர் பிரதிவாதி சட்டத்தரணிகளிடம் வழங்கினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த நீதிபதி, வழக்கை பெப்ரவரி 16 ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உத்தர விட்டார்.

நாமல் ராஜபக்ஷ இலங்கையில் ரக்பியை ஊக்குவிப்பதற்காக, இந்தியாவின் "கிரிஷ்" நிறுவனத்திட மிருந்து 70 மில்லியன் ரூபாயினை பெற்று பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாக சட்டமா அதிபர் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
12இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Hotel Management,Manager(pvt)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16334

பிறப்பு: 1985 - இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி-பா-54 1/2
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Driver
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16335

பிறப்பு:1996 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா- 10 1/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Doctor,Engineer
தொ.இ: B/16337

பிறப்பு :1972 - இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 14
உயரம் : 5'7"
தகைமை/தொழில்:Driver
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்.விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16338

பிறப்பு:1997-இந்து
நட்சத் திரம்: அவிட்டம்
உயரம் :6"
தகைமை/தொழில்-Diploma, Bank Associate
எதிர்பார்ப்பு: ஆசிரியர்
தொ.இ: B/16339

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1992 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
7இல்செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L,Work
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16360

பிறப்பு -1998 - இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்-A/L,Beautician
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16363

பிறப்பு - 1994 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1இல்செவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Degree,Swiss
எதிர்பார்ப்பு - Swiss, German
தொ.இ: G/16364

பிறப்பு - 1995 - இந்து
நட்சத்திரம்: பூசம்
கி-பா-23 1/2
12இல் செவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில் - மிருகவைத்தியர்
எதிர்பார்ப்பு - Doctor
தொ.இ: G/16367

பிறப்பு-2000 - இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16370

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 502

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள்! அதாவது குழந்தை மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால் தான் குழந்தைக்குப் பிடிக்கும் , புரியும் என்பதே இவர்கள் நினைப்பு! ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத் தானே குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்ளும். நாமே குழந்தைகள் மாதிரி பேசிக்கொண்டிருந்தால் அவை நல்ல விதமாகப் பேசக் கற்றுக்கொள்வது எப்படி?

இதனாலே குழந்தை பேசக் கற்றுக்கொள்ளும் வேகம் தடைப்படும்!

ஒரு பத்துக் குழந்தைகளிடம் உனக்கு அப்பாவைப் பிடிக்குமா? அம்மாவைப் பிடிக்குமா? என்று கேட்டால், பாதி குழந்தைகளுக்கு மேலே அம்மாவைப் பிடிக்கும் என்றுதான் சொல்லுமாம்!

அப்பா என்ன பாவம் செய்தார். அது ஒன்றுமில்லை.

குழந்தை தாய் வயிற்றிலே ஏழு மாத குழந்தையாக இருக்கின்ற போதே அம்மா குரலைக் கேட்டு உட்கார்ந்து இருக்குமாம்! தாயின் வயிற்றுக்குள்ளே ஒரு சின்ன "மைக்" வைத்து ஒலிப்பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள், மற்றவர்கள் பேசுவதைவிட அம்மாவே பேசும் குரல்தான் ரொம்பத் தெளிவாக கேட்குதாம்!

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலே இருந்து கேட்கின்ற குரல் அம்மாவின் குரல்! அதனாலே தான் அம்மா என்றால் ஒரு தனி பாசம்! தாயின் பேச்சைக் கேட்டு வயிற்றிலே இருக்கின்ற குழந்தை பேசுக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய்மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்!

பிரஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்திலே ஆராய்ச்சி நடத்தினார்களாம்! பிறந்து நான்கு நாள் ஆவதற்குள்ளே குழந்தை ரஷ்ய மொழியைவிட பிரஞ்சு மொழியை விரும்புவதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இன்னொரு செய்தி

எட்டு வயதுக்கு மேலே புதிதாக கற்றுக் கொள்கின்ற எந்த மொழியுமே தாய்மொழியை விட கஷ்டமாகத்தான் இருக்குமாம்! ஒரு குழந்தை பிறந்து எட்டு மாதம் ஆனதுமே. அதற்கு நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்துவிடும்! அதனாலே அதன் பின்பு அதனிடம் உட்கார்ந்துக் கொண்டு சின்ன குழந்தை மாதிரி நீங்களும் மழலை பேசிக்கொண்டு இருக்காதீர்கள்!

தெளிவாக நல்ல தமிழிலே பேசுங்கள். அது புரிந்து கற்றுக்கொள்ளும்! அந்த நேரத்திலேயெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும்! - கிளி மாதிரி! தானே யோசித்துப் பேச இரண்டு மூன்று வருடம் ஆகும். அதற்கிடையிலே குழந்தை தப்புத் தப்பாக வார்த்தைகளைப் போட்டுப் பேச ஆரம்பிக்கும்!

உதாரணத்திற்கு பூனைக்குட்டி வந்தார். அப்பா போச்சு. இப்படியெல்லாம் பேசும். அதைப் பார்த்துச் சிரிக்கக்கூடாது. கிண்டல் செய்யக் கூடாது. வார்த்தை வித்தியாசத்தைப் பொறுமையாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். நீங்களும் நிறைய பேச வேண்டும். குழந்தைகளையும் நிறைய பேசச் சொல்ல வேண்டும். நல்லா பேசிக்கொண்டிருக்கின்ற குழந்தையிடம் போய் வாயை மூடு என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது!

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இதைப் பற்றியெல்லாம் நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

அவர் தான் சொல்கிறார். குழந்தை தாயின் வயிற்றில் ஏழு மாதமாக இருக்கும் போதே பேசக் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விடுகிறது என்று! சீக்கிரம் பேச ஆரம்பித்துவிடும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சில பேர் சொல்வது உண்டு! அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கை தான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட அம்மாவைப் பிடித்திருக்கிறது ஏன்? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பாக்கள் குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு. ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்துக் கேட்டார்.

"உங்கள் கணக்கு வாத்தியார் Home Work கொடுத்திருக்கிறதாக கூறினாய் அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் போட்டுத் தரவா?" என்று கேட்டார்.

"வேண்டாம் அப்பா! நானே அதை தவறாகப் போட்டுக்கொள்கிறேன்!" என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 937





இந்த விடயமாகத் தங்கள் திருக்கோவலூர்ப் பாட்டனை யோசனை கேட்டிருப்பீர்களே? மலையமான் என்ன சொல்கிறார்?" என்றார்.

"ஆகா! அந்தக் கிழவனாரின் இயல்புதான் உங்களுக்கெல்லாம் தெரியுமே? அவருடைய பேரப்பிள்ளை சிம்மாசனத்தை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுத்து விட அவர் சம்மதிப்பாரா? அதைக் காட்டிலும் என்னையும், என்னைப் பெற்ற தாயையும் சேர்த்து அவர் வெட்டிப்போட்டு விடுவார்! இப்போது மலையமான் சைன்யம் சேர்க்கத் தொடங்கி விட்டார் அவருடைய பேரனுடைய சிங்காதன உரிமையை நிலைநாட்டுவதற்காக! ஆனால் நான் அவருடைய பேச்சைக் கேட்டு மட்டும் நடக்கப்போவதில்லை. நீங்கள் எல்லாரும் எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படி நடந்து கொள்வேன்!" என்று கரிகாலன் மிக்க சாதுப் பிள்ளையைப் போல் கூறினான்.

இதனால் ஏமாந்துபோன பழுவேட்டரையர், "மலையமானைப் போல் தந்தையைத் தனயன் எதிர்க்கும்படி தூண்டிவிடக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. சக்கரவர்த்தியின் கட்டளை எதுவாயிருந்தாலும் அதை அனுசரித்து நடக்க நாம் எல்லோரும் கடமைப் பட்டவர்கள். ஆனால் நியாயம் இன்னது என்பதைச் சொல்லும் பாத்தியதை நமக்கு உண்டு. சக்கரவர்த்தி இந்த விடயமாகச் சொல்வதில் நியாயமே இல்லையென்று சொல்ல முடியாது. இந்தச் சோழ ராஜ்யத்தின் மீது மதுராந்தகத் தேவருக்கு உரிமையே கிடையாது என்றும் சொல்வதற்கில்லை. இளவரசே! தாங்கள் கேட்கிறபடியினால் எங்கள் மனதை விட்டுச் சொல்கிறோம். முடிவு தங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. இந்த விவாதத்தை வளரும்படி விடுவது இராஜ்யத்துக்கு மிக்க அபாயகரமானது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகையால் ஏதேனும் ஒரு சமரச முடிவுக்கு வருவது நல்லது. சோழ ராஜ்யம் இப்போது முன்னைப் போல் இரண்டு வெள்ளாறுகளுக்கு மத்தியில் குறுகிக் கிடக்கவில்லை. குமரி முனையிலிருந்து கிருஷ்ணை நதி வரையில் பரவிப் படர்ந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரித்தாலும் ஒவ்வொன்றும் பெரிய இராஜ்யமாக இருக்கும். அவ்விதம் கொள்ளிடம் நதிக்குத் தெற்கேயுள்ள ராஜ்யத்தை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கேயுள்ள பகுதியைத் தங்களுக்கும் உரியதென்று பிரித்துக் கொடுப்பது நியாயமாயிருக்கும் இது எங்கள் முடிவான கருத்து. தாங்கள் இதை ஒப்புக் கொண்டால் மேலே செய்ய வேண்டியதைச் செய்யலாம். சக்கரவர்த்தியை இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கச் செய்யும் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன்!" என்றார்.

ஆதித்த கரிகாலன் அப்போது கலகலவென்று சிரித்தது பழுவேட்டரையருடைய வயிற்றில் அனலை மூட்டியது. "பாட்டா! சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துத் தெற்கு இராஜ்யத்தில் பழுவேட்டரையர்களும் வடக்கு இராஜ்யத்தில் சம்புவரையர்களும் அதிகாரம் செலுத்துவது சரியான பங்கீடுதான். உங்கள் இரு குடும்பங்களும் என் பாட்டனுக்குத் தகப்பனார் காலத்திலிருந்து செய்து வந்திருக்கும் சேவைக்கு உரிய வெகுமதிதான். ஆனால் இராஜ்யத்தைப் பிரிப்பதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## குழந்தையிடமிருந்து கற்றுக் கொண்டான்



கணவனும் மனைவியும் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். கணவன் ஒரு கடையில் குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்தான்.

மனைவியின் பிறந்த வீடு வசதியானது. ஆகையால் அங்கே இருந்து அவ்வப்போது தேவையானவற்றை வாங்கி வந்து குடும்பத்தைச் சமாளித்தாள்.

அதனால் கர்வம் கொண்டு, கணவனைக் கேவலமாகப் பேசி வந்ததுடன் உருப்படாதவரே! என்று சொல்வாள், அப்படியே கூப்பிடுவாள்.

மனைவியின் அலட்சியத்தால் அவன் பொறுமை இழந்து, ஒரு நாள் வீட்டை விட்டு சொல்லாமல் வெளியேறி விட்டான்.

அவர் எங்கே போனார், என்ன ஆனார், என்பதைப் பற்றி சிறிதும் அவள் கவலைப்படவே இல்லை.

மூன்று மாதங்கள் அலைந்து திரிந்து சரியான வேலை கிடைக்காமல், பட்டினியோடு வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

ஆனால், தயங்கியபடி வாயிற்படியில் நின்று கொண்டிருந்தான்.

அவனுடைய மூன்றரை வயதுப் பெண் குழந்தை அவனைப் பார்த்ததும் வீட்டுக்குள் ஓடிப்போய், "அம்மா! நீ எப்போதும் 'உருப்படாதவரே' என்று சொல்லிக் கொண்டிருப்பாயே! அந்த 'உருப்படாதவர்' வந்து வாசற்படியல் நிற்கிறார்" என்று கூறியது.

அடுக்களையிலிருந்து மனைவி வந்து பார்த்தாள். கணவன் நின்று கொண்டிருந்தான். அவனை உள்ளே அழைத்தாள்.

தான் கூறுவதைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த குழந்தை, 'அப்பா' என்று கூறாமல், 'உருப்படாதவர்' என்று குழந்தை கூறியதை நினைத்துக் கண் கலங்கிவிட்டாள். வெட்கப் பட்டாள்.

பிறகு கணவனை அப்படி அலட்சியமாக கூப்பிடாமல், மரியாதையாக நடந்து கொண்டாள்.

கணவனின் வருமானம் குறைவாக இருந்தாலும் அல்லது தான் வேலை பார்த்துச் சம்பாதித்தாலும் சில மனைவியரிடையே அலட்சியப் போக்கு இருக்கவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## அகவை 26 நிறைவில் உங்கள் வலம்புரி

எம் உயிராய் எம்முள் உறைந்திருக்கும் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய வலம்புரியின் வாசகப் பெருமக்களே!

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 26. அகவை 26 என்றதும் நீங்கள் அடைகின்ற புளகாங்கிதத்தை நிச்சயம் நாம் நன்கு அறிவோம்.

ஏனெனில், வலம்புரியைப் பிரசவித்தது நாமாயினும் அதனைப் பேணிப் பாதுகாத்து வளர்த்த தாயும் தந்தையும் உடன்பிறப்பும் உற்ற உறவும் நட்பும் நீங்களன்றோ.

ஆம், யாழ்ப்பாண மண்ணில் 20.12.1999 ஆம் ஆண்டு அவதரித்த வலம்புரியின் சங்கநாதம் கேட்டு கலங்கிய சிலர் அதன் உயிர்ப்பை பறித்துவிடப் பல திட்டம் தீட்டினர். ஆனாலும் அது முடியவில்லை. அதற்கு நம் பலம் காரணமன்று.

மக்கள் பலமே இறை பலம் என்பது போல, நீங்கள் வலம்புரி மீது காட்டிய அளவு கடந்த அன்பும் பாசமும் பரிவும் வலம்புரியை இன்று வாலிப மிடுக்கில் நிறுத்தியும் உயர்த்தியும் உள்ளது.

உள்ளன்போடும் நேர்மைத்திறத்துடனும் இதய சுத்தியோடும் வலம்புரியை ஆரத்தழுவி அதனை நடுநிலை தவறாத நாளிதழாய் வளர்த்தெடுத்தவர்கள் நீங்கள்.

ஆம். தர்மம் தழைக்க, உண்மையும் மனிதநேயமும் நிலைக்க, ஒவ்வொரு தனிமனிதனதும் கௌரவத்தைப் பாதுகாக்க விரும்பிய உங்களால் வளர்க்கப்பட்ட வலம்புரி மகவு கனவிலும் கூட எவரையும் வஞ்சிக்கவில்லை.

யாருடைய பதவிகளையும் கௌரவங்களையும் பறிக்க வேண்டுமென மனத்தாலும் எண்ணியதில்லை. அன்றி, நீங்கள் வளர்த்தெடுத்த மகவினூடு நாம் பதவி தேட முற்பட்டதும் இல்லை.

இவற்றையெல்லாம் கடந்து எங்கள் கையில் பத்திரிகை உளது ஆகையால், நாம் எதையும் எழுதலாம் என மமதை கொண்டதுமில்லை.

இதை நாம் செய்திருப்போமாயின் அகவை 26 இல் உங்களுடன் நாம் இருந்திருக்கவும் இயற்கை விட்டிராது.

ஆம், இறைவன் என்ற பேரருட் சக்தியின் மகிமை பற்றி நாம் நன்கு உணர்ந்துள்ளோம். மமதையும் ஆணவமும் எப்படியாகும் என்பதை அனுபவத்தில் கண்ணுற்றோம்.

எங்கள் பாதை கடவுளுக்கும் எம் மனச்சாட்சிக்கும் எல்லாவற்றையும் கடந்து, வலம்புரியை யாசித்தும் நேசித்தும் அதனை வாழ வைக்கின்ற உங்களின் உயர்ந்த நினைப்புக்கும் ஒருபோதும் பங்கம் ஏற்படாமல் தர்மத்தின் வழிநின்று பணி தொடர்ந்தோம்.

அன்புக்குரிய பெருமக்களே!

*"வலம்புரி விளம்பரத்துக்காக ஒருபோதும் விலைபோகாத நாளிதழ்"* என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியது கண்டு எம் கண்கள் பனித்தன.

மனம், மெய், மொழிகளால் நாம் இறுகக் கடைப்பிடித்த அந்த உண்மையை எங்கள் மண்ணின் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்ட போது, இந்த உலகம் எத்துணை உன்னிப்பாக கவனித்தும் கருத்தில் கொண்டும் உயர்ந்து நிற்கிறது என்ற மெய்மையை உணர்ந்தோம்.

உண்மை. தர்மத்தின் வாழ்வு எத்துணை உயர்வானது – எத்துணை பெறுமதியானது – எத்துணை ஆனந்தமானது இந்த அகவய அனுபவிப்போடு உங்கள் வலம்புரி இறைவன் சாட்சியாக தர்மத்தின் வழிநின்று தன் பணி தொடரும் என இப்பெறுமதியான வேளையில் சத்தியம் செய்கிறோம்.

# இலங்கை மக்களுக்காக இந்தியா என்றுமே உங்களுடன் துணைநிற்கும்

## இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி

*(மன்னார்)*

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்கள் இலங்கை மக்களுடன் என்றுமே துணை நிற்பார்கள் என இலங்கைக்கான இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளி தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு வழங்கும் வகையில் இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (19) வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு நிவாரணப் பொருட்களை கையளித்த பின் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு முதல் கட்டமாக வழங்கும் வகையில் இந்த நிவாரணப் பொருட்களை கையளித்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட குறித்த நிவாரணப் பொருட்கள் மன்னார் மாவட்டத்திற்கும் பங்கிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட புயல் காரணமாக நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நவம்பர் 28 ஆம் திகதி முதல் இந்திய மக்களினதும் அரசாங்கத்தினதும் உதவி ஊடாக இதுவரை சுமார் 1700 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உதவிப் பொருட்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அந்த வரிசையிலே வடக்கு மாகாணத்திற்கும் குறிப்பாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறோம்.

இந்த நிவாரண உதவிகள் மாத்திரமின்றி மன்னார் மாவட்டத்தில் அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள், படகுகள், வெளி இணைப்பு இயந்திரங்கள் போன்றவற்றை வெகுவிரைவில் வழங்கவுள்ளோம்.

அதனை வெகுவிரைவில் எதிர்பார்க்கலாம். இந்திய அரசாங்கம், இந்திய மக்கள், இந்திய தூதரகமும் என்றும் உங்களுடன் துணை நிற்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். *(ம-7)*

### வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்கான கொடுப்பனவு

## இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு வழங்கிவைப்பு

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்காக வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா ஆரம்பக்கட்டக் கொடுப்பனவு, இதுவரை 2 இலட்சத்து 57 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மைய சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கினால் நாடளாவிய ரீதியில் மொத்தம் 6,10,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுவதற்கு 4,93,000 குடும்பங்கள் தகுதியுடையவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தகுதியுடையவர்களில் இதுவரை 2,57,000 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக இதுவரை 6.4 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் திட்டத்திற்காக அரசாங்கம் மொத்தம் 17.6 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை மிக விரைவில் முழுமையாக வழங்கி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் மேலும் உறுதியளித்தார். *(ம-7)*

### கோப்பாய் தெற்கில்

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

*(யாழ்ப்பாணம்)*

கோப்பாய் தெற்கில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதில் அதே பகுதியைச் சேர்ந்த தங்கவடிவேலு முருகானந்தம் (வயது-34) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை (19) வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புதொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். *(ம-7,60)*

## திருமதி சாந்தினி வாகீசனின் மணிவிழா நாளை

*(யாழ்ப்பாணம்)*

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களின் மணிவிழா வைபவமானது நாளை (21) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியளவில் பாடசாலையின் திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரைகளை நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலய ஆதீனகுரு பிரம்மஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள்,தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி ஜெயமலர் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன், யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசியர், தி. வேல்நம்பி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசன், யாழ்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக சாந்தினியம் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

## எல்ல பாலத்திலிருந்து கீழே விழுந்து ஒருவர் பலி

எல்ல ஒன்பதுவளைவு பாலத்தில் இருந்து கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என எல்ல பொலிஸார் தெரிவித்தனர். தெமோதரை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர், நேற்று முன்தினம் மாலை எல்ல 9 வளைவு பாலத்தின் தெமோதரை - எல்ல ரயில் மார்க்கத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த போது கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவர் பாலத்தில் இருந்து கீழே குதித்தாரா? அல்லது தவறி விழுந்தாரா? என்பது தொடர்பில் எல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

19

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இடம்பெற்ற தேர்தல்களில் 1970 தேர்தல்களே கடைசித் தேர்தல்களாகும். 1972 மே 22 ஆம் நாள் காலனித்துவ டொமினியன் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை அதனைக் கைவிட்டு குடியரசானது. பிரித்தானியர் வசம் இருந்த தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டன. அத்துடன் வறிய கிராம மக்களுக்கு நிலம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

### தேசிய அரசுப் பேரவை

தேசிய அரசுப் பேரவை (National State Assembly) என்பது இலங்கையின் முதலாவது குடியரசு. அரசியலமைப்பின் படி 1972 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை ஆகும். 1947 இல் உருவாக்கப்பட்ட இரு அங்க இலங்கை பாராளுமன்றம் (இலங்கை பிரதிநிதிகள் சபை மற்றும் இலங்கை செனட் சபை) ஆகியவை இல்லாதொழிக்கப்பட்டு ஓரங்க முறைமையுடன் கூடிய தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டு) ஏற்கனவே 1947 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பிற்கு பதிலாக புதியதோர் அரசியல் அமைப்பினை உருவாக்கி, 1972 மே 22ஆம் திகதி பிரகடனப்படுத்தியது. இந்த அரசியலமைப்பு முதலாம் குடியரசு அரசியலமைப்பு எனப்படுகின்றது. 1972-1978 காலப் பகுதியில் சட்டவாக்கத் துறையான பாராளு மன்றம் தேசிய அரசுப் பேரவை என்று கூறப் பட்டது. 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி ஏழாவது பாராளுமன்றத்தை அமைப் பதற்காக 440 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் 14 பேர் பெண்கள், இவர்கள் கட்சி ரீதியாகப் பின்வருமாறு காணப்பட்டனர். 1. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - 4 பெண்கள், 2. லங்கா சமசமாஜக் கட்சி - 2 பெண்கள், 3. ஐக்கிய தேசியக் கட்சி - 3 பெண்கள், 4. மக்கள் ஐக்கிய முன்னணி - 1 பெண், 5. சிங்கள மக்கள் கட்சி ( சிங்கள மகா ஜன பக்ஷய) - 4 பெண்கள் இத் தேர்தலில் மூன்று தம்பதிகள் போட்டியிட்டனர். அவர்கள் பிலிப் குணவர்தனா - குசுமா குணவர்தனா, டீ. பி. இலங்கரத்ன - தமரா குமாரி இலங்கரத்ன, லெஸ்லி குணவர்தனா- விவியன் குணவர்தனா. இதில் பிலிப் குணவர்தனா - குசுமா குணவர்தனா தம்பதி யினர் தோல்வி அடைந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நான்கு பெண்களும் வென்றார்கள். அதேபோல்? லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் போட்டியிட்ட இருவரும் வென்றார்கள். ஏனைய அனைத்துப் பெண்களும் தோல்வியடைந்தனர்.

### வெற்றி அடைந்த பெண்கள்

குசலா அபயவர்தன (பொரல்ல), திருமதி. சிறிமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்க (அத்தன கல்ல), திருமதி விவியன் குணவர்தன (தெஹிவளை - கல்கிஸ்ஸ), திருமதி தமராகுமாரி இலங்கரத்ன (கலகெதர), திருமதி சிவகாமி ஒபேசேகர (மீரிகம), திருமதிமல்லிகா ரத்தவத்த (பலாங்கொடை) .

அத்தனகல தொகுதியில் போட்டியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா 21,723 அதிகப்படியான வாக்குகள் பெற்று வென்றார். பலாங்கொடை தேர்தற் தொகுதியில் 7,180 அதிகபடியான வாக்குகளைப் பெற்று வென்ற மல்லிகா ரத்வத்த இரண்டாவது தடவையும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இத் தொகுதியில் நான்கு பேர் போட்டியிட்டிருந்த போதும் இரு பெண்களுக்கிடையிலேயே போட்டி காணப்பட்டது. இத் தேர்தலில் மல்லிகாவுக்குப் போட்டியாக ஐ.தே.கவின் சார்பில் சீதா மொலமூரே செனவிரத்ன போட்டியிட்டார். அவர் பெற்ற வாக்குகள் 11 619 ஆகும். 1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 844 அதிகபடியான வாக்குகளைப் பெற்று மீரிகம தொகுதியில் வென்ற திருமதி சிவகாமி ஒபேசேகர இம்முறை 5323 அதிகபடியான வாக்குகளைப் பெற்று அதே தொகுதியில் வென்றார். அவர் பெற்ற வாக்குகள் 24,872. இவர் 1970 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் புதிய அரசியலமைப்பின் பிரகாரம் 1975 இல் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2560 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கலகெதர தொகுதியில் தமரா குமாரி இலங்கரத்ன வென்றார்.

### சிவகாமி ஒபேசேகர (1965-1977)

இந்திய வம்சாவளி செட்டி இனத்தைச் சேர்ந்த சிவகாமி ஒபேசேகர, சிவகாமி என்ற தன் பெயரை சிவா என சுருக்கிக் கொண்டார். (ஆனால், அவர் தமிழர் அல்ல என்ற கருத்தும் உண்டு. சிவகாமி என்கிற பெயர் தமிழ் அடையாள மயக்கத்தைத் தந்த போதும் அவர் சிங்கள நிலப் பிரபுத்துவ பின்னணியைக் கொண்ட ஒரு மேட்டுக் குடிப் பெண் என்றும் கூறுகின்றனர்). 1965 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் அட்டவணை அரச வர்த்தமானியில் இவரின் பெயர் சிவகாமி என்றே பதியப்பட்டுள்ளது. போர்த்துக்கேய வம்சாவளி பிரபு பரம்பரையைச் சேர்ந்த ஜேம்ஸ் ஒபேசேகர என்ற தனவந்தரை திருமணம் புரிந்தவர். ஜேம்ஸ் ஒபேசேகர 1960 முதல் 1965 வரை அத்தனகல்ல பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, சிவா ஒபேசேகர அத்தனகல்லை தேர்தல் தொகுதியில் உள்ள 127 கிராமங்களில் சமூக சுகாதார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, கைவினை மற்றும் கைத்தறி மையங்களை தீவிரமாக மேம்படுத்தத் தொடங்கினார்.

1961 இல், அவர் சிறு தொழில் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1963 இல், அவர் விடுதிக் குழுவின் (Accommodation Committee) தலைவராகவும், சுற்றுலா மேம்பாட்டுச் சட்டத்தை உருவாக்கிய சுற்றுலா மேம்பாட்டுச் சபையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். 1964 ஆம் ஆண்டில், அவர் லக்சலாவைத் தொடங்கினார், இது முதல் அரசாங்க குடிசைத் தொழில்துறை விற்பனைப் பெருநிலையமாக இருந்தது. மேலும் அதன் ஆலோசனைக் குழுவின் தலைவரானார்.

கைவினைஞர் கற்கைநெறி தொழிற்பயிற்சி திட்டத்தை ஊக்குவிப்பதற்காக அவர் இலங்கையின் கைவினைஞர் சங்கத்தையும் நிறுவினார். 1973 இல், அவர் தேசிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

23.03.1965 இல் இடம் பெற்ற ஆறாவது பாராளுமன்றத்துக்கான தேர்தலில் மீரிகம தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக களம் இறங்கி 17,802 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானார். இவர் 1970 இன் பாராளு மன்றத் தேர்தலில் மீண்டும் மீரிகம தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதி சுகாதார அமைச்சரா னார் (1970-76). அதன் பின் சுகாதார அமைச்சரானார் (1976-77). அவரது பதவிக்காலத்தில், அவர் தேசிய குடும்ப நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார், பின்னர் அது சர்வதேச மாதிரி யாக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செனட்டர் எட்வர்ட் கென்னடி அவரது முயற்சிகளுக்கு பாராட்டுக்குரிய சிறப்பு விருதை வழங்கினார். 1973 ஆம் ஆண்டில், ஜகார்த்தாவில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு பெண்களின் நிலை மாநாட்டின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் புக்கரெஸ்டில் நடை பெற்ற உலக மக்கள் தொகை மாநாட்டிற்கு இலங்கைப் பிரதிநிதிகள் குழுவை வழிநடத்தினார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

சூட்டியுள்ளார்.

அவர் வழங்கிய வாழ்த்துச் செய்தி வருமாறு,

*"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து*
*ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி"*

வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நடுவு நிலைமை தவறாமல், அறிவு சார் வளர்ச்சி, கருத்துச் சுதந்திரம், கலாசாரம், சமூக சமத்துவம் என்பவற்றைப் பேணும் வகையில் அவற்றைத் தனது கொள்கையாக வகுத்துக் கொண்டு வடபுலத்து ஊடக வரலாற்றில் 26 ஆண்டுகளை நிறைவு செய்து 20.12.2025 இல் அகவை 27ல் கால்பதிக்கும் "வலம்புரி" நாளிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

பத்திரிகைச் செய்திகளினூடாக, குறிப்பாக வடமாகாணத்தில் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கும் நியாயமான போராட்டங்களை ஆதரிப்பதிலும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்காகவும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் தமது காத்திரமான பங்களிப்பை நல்கிவரும் "வலம்புரி" பத்திரிகை குழுமத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

கடந்த 26 வருடங்களாக பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த போதும் அரசியல் வரலாற்றிலும் கல்வி, கலாசார, பொருளாதார மற்றும் விளையாட்டுத்துறையிலும் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை அனைத்தையும் நம்முன்னே கொண்டுவந்து; வடக்கின் ஊடக வரலாற்றில் தலைநிமிர்ந்து நிற்கின்றது "வலம்புரி". குறிப்பாகப் பலராலும் விரும்பிப் படிக்கப்படும் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கமானது திறனாய்வு முறையில் கருத்துப் பற்றிய தீர்வினை நடுநிலைமையுடனும் சமூக நோக்கைத் தெளிவாக உணர்த்தும் வகையிலும் வெளியிடப்பட்டு வருவது மெச்சத்தக்கது.

இன்றைய கால ஓட்டத்தில் சமூக ஊடகங்கள் மூலமான செய்திகளின் அதிவேகப் பரவலானது உலகையே நம் கைகளுக்குள் கொண்டுவந்துள்ளது. அதேவேளை இச்செய்திகளை ஆய்ந்தறிந்து புதிய தொழில்நுட்ப வடிவங்களுக்கேற்ப தம்மைத் தயார் படுத்திக் கொண்டு, மக்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் தலையாய கடமை பத்திரிகைகளுக்குரியது.

அந்த வகையில் "வலம்புரி" இன்னும் பல்லாண்டுகள் வடபுலத்து ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் கூடிய சிறப்பான சேவையை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, 27ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இத்தருணத்தில் "வலம்புரி" பத்திரிகைக் குழுமத்தினர் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (ம-7)

## அமைக்க...

வழங்கியிருந்த யாழ்.மாவட்ட நீதிவான் சுப்ரமணியம் சிவகுமாரன் நேற்று நீதிமன்றத்துக்குச் சொந்த விடுமுறை காரணமாக வரவில்லை. எனினும், நேற்று திகதியிட்டு இந்த வழக்கையொட்டி அவர் வழங்கிய உத்தரவு ஒன்றை பதில் நீதிவான் நீதிமன்றத்தில் வாசித்தார்.

ஏற்கெனவே வழங்கப்பட்ட கட்டளை நேற்றைய திகதியில் முடிவடைய இருக்கும் நிலையில் அதனைத் தான் தொடர்ந்து நீடிக்கவில்லை என்ற உத்தரவை அதில் நீதிவான் சுகுமாரன் தெளிவுபடுத்தி இருந்தார்

ஏற்கெனவே வழங்கப்பட்ட கட்டளை தொடர்பில் சட்டநுட்ப விடயங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டி தாம் அந்தக் கட்டளையைத் தொடர்ந்து நீடிக்கவில்லை என்று அவர் அந்த உத்தரவில் தெரிவித்திருந்தார்.

இதேசமயம், இந்த வழக்கில் இடையீட்டு வழக்காளியாகத் தம்மையும் சேர்த்துக்கொள்ளச் சொல்லி யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி மேயர் இமானுவேல் தயாளன் தாக்கல் செய்த மனுவை அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கேசவன் சயந்தன் நேற்று மன்றில் சமர்ப்பித்தார். அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதனால் இந்த வழக்கில் அடுத்த வழக்காளியாக இமானுவேல் தயாளன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார்.

கட்டளையை நீதிமன்றம் நீடிக்காத காரணத்தால் தாங்கள் கட்டட வேலையைத் தொடர முடியுமா? என்று அவர் மன்றிடம் கோரினார். மன்று அது தொடர்பில் வழிகாட்டுதல் எதனையும் வழங்கவில்லை.

அப்போது மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், "நீதிமன்றம் வழங்கிய கட்டளை நீடிக்கப்படவில்லையே தவிர, இந்தக் கட்டட வேலைக்கு எதிராக நாங்கள் நீதிமன்றத்திடம் கோரிய இடைக்காலத் தடையுத்தரவுக் கோரிக்கை இன்னும் நீதிமன்றப் பரிசீலனையிலேயே இருக்கின்றது. அந்தப் பின்புலத்தில் கட்டட வேலை ஆரம்பிக்கப்பட்டால், உரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்" என்று மன்றில் தெரிவித்தார்.

வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-7)

## குறை...

யெழுப்புவதற்காக 2026ஆம் ஆண்டுக்கான 500 பில்லியன் ரூபாயுக்கான குறை நிரப்பு மதிப்பீடு பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தக் குறை நிரப்பு மதிப்பீடை பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பித்திருந்தார்.

நேற்று மு.ப 10.00 மணி முதல் பி.ப 6.10 மணி வரை இது தொடர்பான விவாதம் இடம் பெற்றதுடன், 500 பில்லியன் ரூபாய் குறைநிரப்பு மதிப்பீடு வாக்கெடுப்பின்றி அங்கீகரிக்கப்பட்டது. (ம-7)

## வவு...

சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்ட பெண் கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவராவார்.

குடும்பத் தகராறு காரணமாக உயிரிழந்த பெண்ணின் கணவரால் இந்தக் கொலை செய்யப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மனைவியைக் கொலை செய்த பின்னர் கணவரும் கழுத்தை அறுத்துக் கொண்டதாகவும் தற்போது காயங்களுடன் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 6048
P 6 4 5 5 2 5
அத சம்பத
P 5 5 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 0623
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 0164
தனுசு 21 25 41

தன நிதானய
திகதி - 2025.12.19
சீட்டிழுப்பு இலக்கம் - 2078
K 17 19 50 62 K

மெகா பவர்
திகதி 19/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2396
C 01 03 11 15 72

ஜய
திகதி 2025.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 0316
H 6 4 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4290
சீட்டிழுப்பு திகதி 19.12.2025
X 40 55 68 80
X
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 1357
மகரம் 07 13 17 47 மகரம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.12.2025 வெற்றி வாரம் 0756
P 7 2 3 4 1 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,851,769.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3022
சீட்டிழுப்பு திகதி 2025.12.19 தினம் வெள்ளிக்கிழமை
03 12 35 45 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,688,016.00
DLB

சனிதா
திகதி 19.12.2025 வெற்றி வாரம் 5183
04 19 40 67 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,032,461.20
DLB

சசிரி
வெற்றி வாரம் 852
சீட்டிழுப்பு திகதி 19.12.2025
வெள்ளிக்கிழமை
03 07 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4734
சீட்டிழுப்பு திகதி 19.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
15 16 43 45 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,360,792.80
DLB

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 08 01 35 42 56
சுப்பர் இலக்கம்
2198
19.12.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.614,139,738.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2848
சீட்டிழுப்பு திகதி: 2025.12.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,863,704.80
27 36 50 61 N
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம்

தமிழர்களின் பாரம்பரியம் காக்கும் மாங்கல்யம் திருமண பொருத்துனர் வேலையில் மிக அனுபவம் வாய்ந்த விவாக பொருத்துனர்களில் முன்னோடியான ப.முருகையாவால் பல வருடங்களாக நடாத்தப்படும் காவலன் விவாக பொருத்துனர் சேவை நிலையம் மீண்டும் புத்துயிர் பெற்று யாழில் புதிய காவலன் விவாக பொருத்த நிலையமாக

- கோப்பாய் சந்தி(பருத்தித்துறை வீதி)
- சதாபொன்ஸ் அருகாமையில் அல்வாய்
- நிரு ரியூசன் சென்டரிற்கு அருகாமையில் கோண்டாவில்
- தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் முன்பாகவும்.
- கோப்பாய் மானிப்பாய் வீதி உரும்பிராய் சந்தி அருகாமை.
- தபால்பெட்டி சந்தி, பலாலி வீதியில் (2026 தை முற்பகுதியில் ஆரம்பமாகிறது)

காரியாலயம் அமைந்த சூழலில் வதியும் மக்களாகிய உங்களுக்கு உங்கள் பிள்ளைகளின் திருமண நிகழ்வுகளை இலகுவான முறையில் நிறை வேற்றிக்கொள்வதற்கு தமது பிள்ளைகளின் குறிப்புக்களை காரியாலயத்திற்கு நேரடியாகச் சென்று பதிவுசெய்து அவர்களின் நிழற்படங்கள் மற்றும் நிழற்படப் பிரதிகளை தந்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எம்மிடம் (வெளிநாட்டு, உள்நாட்டு, அரசசார்பற்ற, அரச சார்புள்ள) ஆண், பெண் இருபாலரின் குறிப்புகளும் உண்டு. உங்களால் பதிவு செய்து வைக்கும் குறிப்புகள் எம்மிடமுள்ள குறிப்புக்களுடன் பொருத்தமாக இருப்பின் உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

ஆனால் உங்களை திருப்திப்படுத்தும் நோக்கில் பொருத்தமற்ற குறிப்புகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது. பொருத்தமான குறிப்புகள் மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்
விவாக இணைப்பாளர்,
ப.முருகையா
077 663 0273, 074 382 0000

(C-4630)

## விற்பனைக்கு

பொங்கல் அகப்பை
(சிரட்டை)
விற்பனைக்கு உண்டு.

077 210 5286

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(6308)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | Max 2Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | Max 5 Kg |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 250/= | Max 5 Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 03 |
| 1Kg கடலை | - 349/= | |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | |
| 1Kg குத்தரிசி | - 255/= | |

400g Anchor MAX 01 ~~1200~~ 1139

1Kg சன்லைட் ~~320~~ 280

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30
(1820)




இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible]ரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org